
Registered as a News Paper in Sri lanka

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு - 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 18 திங்கட்கிழமை (01.06.2015) | பக்கங்கள் 20 | ஓசை - 244

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.



# கூட்டமைப்புடனான உறவில் அரசுக்கு சிக்கல்கள் இல்லை

## புரிந்துணர்வுடன் செயற்பாடு என்கிறார் பிரதமர் ரணில்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்து சிறந்த முறையில் புரிந்துணர்வுடன் பணியாற்றுகிறது கூட்டமைப்பு. இம்முறை நடைபெற்ற சுதந்திரதின நிகழ்விலும் கூட கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர். என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய பீடாதிபதி வண.கலகம அட்டடசி தேரரை சந்தித்து கலந்துரையாடியபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன் போது வடக்கில் இருந்து இராணுவம் விலக்கப்பட வேண்டும் என்ற வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் கோரிக்கை தொடர்பாக கேள்வி எழுப்பிய அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர், இத்தகைய கோரிக்கைகள் விடயத்தில் அரசாங்கம் விவேகத்துடன் செயற்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற கோரிக்கைகள் வரும் போது, அரசாங்கம் கவனமாக இருக்க

19 ஆம் பக்கம் பார்க்க

## இம்மாத நடுப்பகுதியில் நாடாளுமன்றம் கலைப்பு?

(கொழும்பு)

இம்மாத நடுப்பகுதியில் நாடாளுமன்றம் கலைக்கப்படலாமென ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

20ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஜே.வி.பி. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மலையக தமிழ்க் கட்சிகள் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதனால் தற்போதைய தேர்தல்முறையிலேயே பொதுத் தேர்தல் நடத்தப்படுமென அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகையையும் 225இல் இருந்து 255ஆக

19 ஆம் பக்கம் பார்க்க

## பொதுத்தேர்தலுக்கு தயாராகும் கூட்டமைப்பு

### வேட்பாளர் தெரிவு மும்முரம்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளிடையே மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. என்பதனை ஒப்புக்கொண்டுள்ள சுரேஷ் பிரேமச்சந்திரன், எதிர்வரும் பொதுத்தேர்தலில் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது, யார் வேட்பாளர்கள் என்பது தொடர்பாக தற்போது கூட்டமைப்பு கட்சிகளிடையே கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

சண்டேலீடர் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவிதுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

போர் முடிவிற்கு வந்து ஆறு வருடங்கள் சென்றுவிட்

19 ஆம் பக்கம் பார்க்க

## வித்தியா கொலை, நீதிமன்றத் தாக்குதல்

# சந்தேக நபர்கள் இன்று நீதிமன்றில்

### பாதுகாப்பு அதிகரிப்பு

யாழ்.புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களென கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 9 பேர் மற்றும் நீதிமன்றத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட 43 சந்தேகநபர்கள் இன்றைய தினம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ள நிலையில் இரு நீதிமன்றங்களுக்கும் அதியுச்ச பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம், 17ஆம், 19ஆம் திகதிகளில் வித்தியா படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 9 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் 3 சந்தேகநபர்களுக்கு 2ஆம் தடவையாக 6ஆம் மாதம் 1ஆம் திகதிக்கு விளக்க மறியல் நீடிக்கப்பட்டதுடன், மற்றைய 6 சந்தேகநபர்களுக்கும் 1ஆம் தடவையாக 6ஆம் மாதம் 1ஆம் திகதி வரையில் விளக்க மறியல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த 9 சந்தேகநபர்களும் இன்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை கடந்த 20ஆம் திகதி நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவத்தில் 129 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்

19 ஆம் பக்கம் பார்க்க

## மேலதிக அரச அதிபராக செந்தில்நந்தனன்

யாழ் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலாளராக நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன், பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் நியமிககப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் யாழ். மாவட்ட மேலதிக செயலாளராக கடமையாற்றி வந்த திருமதி ரூபினி வரதலிங்கம், பதவி உயர்வு பெற்று வடமாகாண பொது நிர்வாக ஆணைக்குழுவுக்கு மாற்றலாகிச் செல்கின்றமையை அடுத்து, நிலவும் பதவி

19 ஆம் பக்கம் பார்க்க

## அரச நிர்வாக சேவைக்கு 175 பேர் புதிதாக இணைப்பு

அரச நிர்வாக சேவைக்கு 175 பேர் புதிதாக இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே தகுதியானவர்களை தேர்ந்தெடுப்பதற்கான நேர்காணல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே. தடல்லகே குறிப்பிட்டுள்ளார்.

அரச நிர்வாக சேவையின்

19 ஆம் பக்கம் பார்க்க

## மணல் அகழ்விற்கான தடை யாழில் விரைவில் நீங்கும்

யாழ்ப்பாணத்தில் மணல் அகழ்விற்கு விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவு விரைவில் தளர்த்தப்படும் என மகாவலி மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் மணல் வளம் செறிந்துள்ள பகுதிகளில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினூடாக ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் நிஹால் ரூபசிங்க குறிப்பிட்டார். ஆய்வுகள் நிறைவடைந்ததன் பின்னர் தற்போது மணல் அகழ்விற்கு விதிக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போன மாணவி வவுனியாவில் கண்டுபிடிப்பு



காணாமற் போன கிளிநொச்சி ஊற்றுப்புலம் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வவுனியாப் பொலிஸாரால் மீட்கப்பட்டு நீதிமன்ற உத்தரவின்பேரில் சிறுவர் இல்லம் ஒன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸதரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊற்றுப்புலம் பாடசாலையில் தரம் 11 இல் கல்வி கற்கும் விதுசா

19 ஆம் பக்கம் பார்க்க

# தமிழக மீனவரின் அத்துமீறலை தடுக்கும் நடவடிக்கை தீவிரம்

### ரோந்து கப்பல்கள் அணிவகுப்பு

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி பிரவேசிப்பதைத் தடுக்க இலங்கை கடற்படை ரோந்துக் கப்பல்கள் சர்வதேச கடல் எல்லையில் குவிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வங்காள விரிகுடா கடற் பகுதியில் தமிழக மீனவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த 45 நாள் மீன்பிடி தடை காலம் கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடிவுக்கு வந்தது.

இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் 4 ஆயிரத்துக்கும் அதிகமான படகுகளில் தமிழக மீனவர்கள் வழக்கம்போல் மீன் பிடிப்பதற்காக கடலுக்குச் சென்றனர். இவர்கள் எந்த நேரத்திலும் சர்வதேச கடல் எல்லைப் பகுதியை கடந்து தங்களுடைய பகுதிக்குள் நுழையலாம் என்று இலங்கை கடற்படை கருதுகிறது.

இதனால், இலங்கை கடல் எல்லைக்குள் தமிழக மீனவர்கள் புகுந்து மீன் பிடிப்பதை தடுக்கும் நோக்கத்துடன் இலங்கைக் கடற்படை தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

குறிப்பாக, கண்காணிப்பு


19 ஆம் பக்கம் பார்க்க

# ஞானஒளி மாதர் சங்கப் பிரதிநிதிகள் டக்ளஸ் தேவானந்தாவுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினை வலி.கிழக்கு அக்கரை ஞானஒளி மாதர்சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து தமது தேவைப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமையலுவலகத்தில் மேற்படி சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இச் சந்திப்பில் அக்கரைப் பகுதியில் மீளக்குடியேறியுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளில் குறிப்பாக குடிநீர் மற்றும் பாதை புனரமைப்பின் அவசியம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.



அத்துடன் அங்குள்ள தொண்டமான் விளையாட்டு மைதானத்தை புனரமைப்பு செய்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

மைதானத்தின் புனரமைப்புக்கு காலக்கிரமத்தில் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இம் மைதானத்தின் புனரமைப்பிற்காக டக்ளஸ் தேவானந்தாவின் 2014 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 90,000 ரூபா வழங்கப்பட்டிருந்ததோடு டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட அயராத முயற்சியின் பயனாக 2013 ஆம் ஆண்டு வலி.கிழக்கு அக்கரைப்பகுதியில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வித்தியாவுக்கு ஆதரவாக வலி.மேற்கில் போராட்டம்



புங்குடுதீவில் இடம்பெற்ற கூட்டு வன்புனவர்வுக்கொடூரத்துக்கு எதிராக வலி. மேற்கு பிரதேசத்தில் தொடரும் மாணவர்கள் போராட்டம் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்கள் வித்தியாவுக்கு இதய அஞ்சலியினை செலுத்தியதோடு நீதி வேண்டியும் மாணவர்களின் எதிர்கால பாதுகாப்பு வேண்டியும் அண்மையில் போராடடங்களில் ஈடுபட்டனர் இந்நிகழ்வின் போது வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் நாக ரஞ்சினி.ஐங்கரன் கலந்து கொண்டு வித்தியாவுக்கு அஞ்சலி செலுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

# புதிய பேருந்து நிலையத்திற்கு இருக்கைகள் அமைக்க கோரிக்கை



(நெல்லியடி)

நெல்லியடி மத்திய பேருந்து நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்தில் பயணிகள் இருப்பதற்கான இருக்கைகள் எவையும் அமைக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்ட இப் பேருந்து நிலையம் இருபது நாட்களைக் கடந்த நிலையிலும் இருக்கைகள் அமைக்கப் படாமையினால் குழந்தைகள், பெண்கள் ஆகியோர் பேருந்து வருகைக்காக நீண்ட நேரம் நின்ற நிலையிலேயே காத்து நிற்க வேண்டியுள்ளது.

அத்துடன் குடிநீர், மலசல கூடம் போன்ற வசதிகளும் அற்றதாக இப்பேருந்து நிலையம் காணப்படுகிறது.

எனவே இப்பேருந்து நிலையம் தொடர்பில் உரியவர்கள் இருக்கைகள் அமைத்து கொடுக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (18)

# முல்லையில் சட்டவிரோத மீன்பிடி தென்னிலங்கை மீனவர்கள் மும்முரம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சட்டவிரோதமான முறையில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த தென்னிலங்கை மீனவர்கள், தமது நடவடிக்கைகளை முள்ளிவாய்க்காலிலும் தொடங்கிய நிலையில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் நேரடி எச்சரிக்கையை அடுத்து வெளியேறியுள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கரைவலைத் தொழிலுக்குரிய அனுமதியைப் பெற்று முள்ளிவாய்க்கால் வந்த தென்னிலங்கையைச் சேர்ந்த சுரங்க என்பவர்,ஏனைய தென்னிலங்கை மீனவர்களின் படகுகள் தெப்பம் ஆகியவற்றுடன் சூடை வலைத் தொழில் எனப்படும் சிறு தொழிலையும் ஆரம்பித்திருந்தார்.

சட்டவிரோதமாக படகுகள் தெப்பங்களுடன் முன்னெடுக்கப்பட்ட இந்த தொழில் நடவடிக்கையால் அதிருப்தியுற்ற முள்ளிவாய்க்கால் பகுதி தமிழ் மீனவர்களின் நெய்தல் முள்ளிவாய்க்கால் கிழக்கு கடற்றொழில் சங்கத்தினர் இதைத் தடுத்து நிறுத்த எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.



இதையடுத்து நெய்தல் முள்ளிவாய்க்கால் கிழக்கு கடற்றொழில் சங்கத்தினர் , வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனை தொடர்பு கொண்டு மேற்படி நிலை தொடர்பில் முறையிட்டனர். உடனே முள்ளிவாய்க்கால் கப்பலடிக்கு விரைந்த வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் சம்பவ இடத்தில் சட்டவிரோதமான முறையில் தென்னிலங்கை மீனவர்கள் கடற்றொழில் நடவடிக்கையை மேற்கொண்டதை நேரில் உறுதிப்படுத்தினார்.

இதே வேளை, அங்கிருந்தபடியே கடற்றொழில் நீரியல் வள உதவிப்பணிப்பாளருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த அத்து மீறல் நடவடிக்கை பற்றி அறிவித்தார்.

இதையடுத்து அங்கிருந்த தென்னிலங்கை மீனவர்கள் தாம் நேற்று அப்பகுதியில் வெளியேறுவதாக தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வாளர்களும் அப்பகுதியில் கூடியதால் ,நேற்று முன்தினம் முள்ளிவாய்க்கால் கரையோரத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தால் பரபரப்பு நிலவியது..

இதே வேளை நேற்றுமுன்தினம் மேற்படி தென்னிலங்கை மீனவர்கள் அங்கிருந்து வெளியேறி விட்டதை தான் உறுதிப்படுத்தியுள்ளதாக ரவிகரன் தெரிவித்துள்ளார்.

(160)

# இலங்கைக்கான நோர்வே தூதுவர் மாணவி வித்தியாவிற்கு அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலைக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன், இங்கு நடைபெற்ற இந்த கொடுமையான வன்முறைச் சம்பவத்தினை மனவருத்தத்துடன் நினைவு கூர்ந்து கொள்வதாக நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் கிறேட் லோசன் தெரிவித்தார்.

யாழ். பொதுநூலக வளாகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சர்வதேச இசை நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு, உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், வித்தியாவிற்கு நிகழ்ந்த இந்த சம்பவமானது நாடு முழுவதையும் உலுக்கியதுடன், பெண்களுக்கு எதிரான பெரிய வன்முறையாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய விடயமாக இருக்கின்றது.

நோர்வே அரசாங்கம் இலங்கையின் வடபகுதி மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எதிர்ப்பதற்கான உரிமை என்ற கருப்பொருளை மையமாக வைத்து செயற்பட்டு வருகின்றது. பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது இலங்கை மட்டுமன்றி உலக நாடுகளிலும், எமது நாட்டிலும் நடைபெற்று வருகின்றது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை செய்யாதிருக்க சிறு பராயத்தில் இருந்து ஆண் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு கற்பித்து கொடுக்கப்பட வேண்டும். பெண்கள், ஆண்களுக்கான சமத்துவம் உரிமை என்பது பற்றி பாடசாலை ஆசிரியர்களாலும் சமூக ஆர்வலர்களாலும், கற்றுக்கொடுக்கப்பட வேண்டிய விடயமாகும்.

நாங்கள் கொடுக்கும் படிப்பினையானது திரும்பவும் எமது பிரதேசங்களில் நடைபெறாது இருப்பதற்கான முக்கியமாக இருக்கும்.

இந்த இசை நிகழ்வினை செய்வதற்கான முக்கிய நோக்கம் . கலைஞர்களுக்கு இடையில் நட்பினையும், புரிந்துணர்வினையும் ஏற்படுத்துவதுடன், இனங்களுக்கு இடையில் நட்பினையும் புரிந்துணர்வினையும் ஏற்படுத்துவதற்காக மட்டுமன்றி இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தினையும் ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன், இசை என்பது சாவதேச ரீதியலான ஒரு மொழி கவலையாக இருக்கும் போது, இசையினைக் கேட்டால் மனதிற்கு ஆறுதலாகவும், உற்சாகமாகவும் இருக்கும். அந்த வகையில் தான் இசை அமைந்துள்ளது.

எனவே, இந்த இசை நிகழ்வின் ஊடாக மக்கள் அனைவருக்கும் இடையில் நட்பும்புரிந்துணர்வும் ஏற்பட வேண்டுமென்று கூறியதுடன், தமிழ் மொழியில் தனது நன்றிகளையும் இலங்கைக்கான நோர்வே தூதுவர் தெரிவித்துக் கொண்டார்.

(25)

# சீராக வீதியை அமைக்குமாறு ஒலுமடு மக்கள் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசத்தில் இருந்து ஒலுமடுவிற்குச் செல்லும் பிரதான வீதி மிக மோசமாகச் சேதமடைந்து உள்ளதால் பொது மக்கள் இவ்வீதியூடாகப் பயணம் செய்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறித்த வீதி தாரினால் புனரமைப்புச் செய்யப்பட்ட போதும் சீரான புனரமைப்பு இன்மையால் உடனடியாகவே இவ்வீதி சேதமடைந்திருந்தது.

சுமார் 6 கிலோமீற்றர் நீளமான இவ்வீதியினை புனரமைப்புச் செய்வதன் மூலம் ஒலுமடு கீரிசுட்டான் மருதோடை போன்ற கிராமங்களுக்கான சீரான போக்குவரத்துக்கு வழி ஏற்படுத்தித் தரவேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ் விடயத்தில் சம்பந்தீப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (69)

# வாள், பொல்லுகளுடன் நடமாடியவர்கள் வவுனியா பொலிஸாரால் கைது

வவுனியாவில் வாள், பொல்லுகளுடன் நடமாடிய 10 பேரை நேற்று முன்தினம் இரவு வவுனியா பொலிஸார் கைது செய்தனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் இருந்து வாகனம் ஒன்றில் வைரவபுளியங்குளம் சிறுவர் பூங்கா நோக்கி வந்த இளைஞர்களையும், சிறுவர் பூங்கா பகுதியில் வாள், பொல்லுகளுடன் நடமாடிய இளைஞர்களையுமே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 10 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து வாள்கள், பொல்லுகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# செயலமர்வுகளுக்குரிய உணவுவகைகளுக்கு கொடுப்பனவு தொகை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களிற்கு நடைபெறும் செயலமர்வுகளிற்குரிய சிற்றுண்டி, உணவு வகைகளிற்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை மூலம் கடந்த 13 ஆம் திகதி மாகாணக் கல்விப்பணிப்பாளருக்கும், சகல வலயக்கல்விப்பணிப்பாளர்களிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.


இதுவரைகாலமும் சிற்றுண்டி, உணவு வகைகளிற்கென ஒவ்வொருவருக்கும் 100 ரூபா வழங்கப்பட்டு வந்தது. இது 8 மணித்தியாலச் செயலமர்வுக்குரியதாக இருந்து வந்தது. இப்பணத்தில் காலை, மாலை தேநீரும் சிற்றுண்டியும் மதிய உணவும் வழங்கவேண்டிய நிலையையே செயலமர்வினை மேற்கொள்வோர் எதிர்கொண்டு வந்துள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு வட மாகாணக் கல்வி அமைச்சு மேற்படி கொடுப்பனவுகளை அதிகரித்துள்ளது.

இதன்படி ஆசிரியர்கள், மாணவர்கள் வதிவிடச் செயலமர்வுகளிற்கு காலைத் தேநீர் ஒருவருக்கு 25 ரூபா, காலை உணவு 100 ரூபா முதல் 120 ரூபா வரையும் இடை நேரத் தேநீர் சிற்றுண்டிக்கு (நாளுக்கு) இருதடவை 120 ரூபாவும், மதிய உணவுக்கு சைவச் சாப்பாடிற்கு 120 முதல் 150 ரூபா வரையும், அசைவச் சாப்பாட்டிற்கு 150 ரூபா முதல் 200 ரூபா வரையும் இரவு உணவுக்கு 100 ரூபா முதல் 120 ரூபா வரையும் தண்ணீர் போத்தலுக்கு 60 ரூபாவும் செலவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வளவாளர்களாகச் செயற்படுபவர்களிற்கான கொடுப்பனவுகளிற்கு முன்னர் போல் மணித்தியாலத்திற்கு 400 ரூபாவும், 1 ஆம் பட்டம் பெற்றவரை 2 ஆம் பட்டம் பெற்றவர்களிற்பு 750 ரூபாவும், கலைப்பட்டம் பெற்றவர்களிற்கு, பேராசிரியர் களிற்கும் 1000 ரூபாவும் வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

பரீட்சை வினாத்தாள் தயாரித்தல், திருத்தப்பணிகளில் ஈடுபடுவோருக்கு தலா ஒன்றிற்கு 500 ரூபாவும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (06)

# நன்னீர் மீன்பிடி சங்கங்களுக்கு உபகரணங்கள் வழங்கி வைப்பு



வவுனியா மாவட்டத்தில் உள்ள நன்னீர் மீன்பிடி சங்கங்களில் தேசிய நீரியல் வளங்கள் அதிகாரசபையால் தெரிவுசெய்யப்பட்ட 17 சங்கங்களுக்கு சுமார் 220 கதிரைகளும் மானிய அடிப்படையில் மீன்பிடி வலைகளும் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சால் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வவுனியா உள்ளக சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக வாரியாக மீன்பிடியாளர்களின் பிரச்சினைகள் தேவைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன் மீன்குஞ்சுகள் வைப்பிலிடல் தொடர்பாகவும், எவ்வாறான மீன்குஞ்சுகளை வைப்பிலிடல்போன்ற விடயங்களை அமைச்சருக்கோ அல்லது தனக்கோ தெரியப்படுத்தும் பட்சத்தில் அவ் வேலைத்திட்டங்களை நடாத்த தாம் உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (160)

## வீதி புனரமைக்க கோரிக்கை

அரியாலை வடக்கு மற்றும் கள்வியங்காட்டு பகுதி உள்ளக கிராம வீதிகள் மிக நீண்டகாலமாக திருத்தப்படாது போக்குவரத்தில் விபத்துக்களுக்கு காரணமாக இருப்பதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மாம்பழம் சந்தியில் இருந்து வடக்காக கள்வியங்காடு நோக்கிச் செல்லும் கன்தரத்தினம் வீதி குன்றும் குழியுமாக சேதமடைந்து காணப்படுகின்றது. இந்த வீதிகளில் பயணிக்கும் பயணிகள் மற்றும் குடியிருப்பாளர்களின் நலன்கருதி மாநகர சபையினர் திருத்தவேலைகளை முன்னெடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(23)

# வற்றாப்பளை பொங்கலை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரசித்திபெற்ற வற்றாப்பளை ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை கொண்டாடப்படவுள்ளதுடன், அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இந்த வருடாந்த பொங்கல் விழாவில் கலந்துகொள்வதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்து இந்து பக்தர்கள் மற்றும் பொது மக்கள் வருகை தருகின்றனர்.

இன்றைய தினம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் பொங்கல் விழாவுக்கு வருகை தரும் மக்களுக்கு விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வடக்கிலுள்ள ஏழு இ.போ.சபை சாலைக்குச் சொந்தமான பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், காரைநகர், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, பருத்தித்துறை ஆகிய ஏழு பேருந்து சாலைகளுக்குச் சொந்தமான பேருந்துகளே இவ்வாறு போக்குவரத்து சேவைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

எனவே, 40 பேருக்கும் அதிகமாக பயணிக்க இருக்கும் பக்தர்கள் அருகிலுள்ள இ.போ. சபைச் சாலைக்கு அறிவிப்பதன் மூலம் பயணத்தை இலகுவாக்கிக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த தினத்தன்று பகல் மற்றும் இரவு நேரங்களில் பாதுகாப்பு கடமைகளுக்காக பெருமளவு பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விசேட பொலிஸ் நடமாடும் சேவை, பொலிஸ் காவலரண் என்பன அமைக்கப்பட்டுள்ளதுடன், ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் பக்தர்கள், பொதுமக்கள் பொலிஸாரிடம் முறையிட முடியும் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (165)

# தெங்கு உற்பத்தியை அதிகரிக்கும் அபிவிருத்தி தொடர்பான ஆராய்வு

வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கத்தின் நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும் நேற்றுமுன்தினம் யாழ்.ஞானம்ஸ் விடுதியில் இடம்பெற்றது. குறித்த கூட்டத்தில் புதிய தலைவராக சு.மோகனதாஸ் என்பவரும் செயலாளராக சி.துரைராஜாவும் தெரிவு செய்யப்பட்டதுடன் தெங்கு செய்கைகள் தொடர்பான கலந்துரையாடல்களும் இடம்பெற்றிருந்தன.

மேற்குறிப்பிட்ட கலந்துரையாடல் தொடர்பாக சங்கத்தின் செயலாளர் தெரிவிக்கையில்,


வடமாகாணத்திலுள்ள தென்னை உற்பத்தியை இன்னமும் எவ்வாறு அதிகரிப்பது தொடர்பாகவும் அவற்றின் வளர்ச்சி மற் றும் அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் தெங்கு உற்பத்தி செயன் முறையில் எவ்வாறான தொழில்நுட்பத்தை புகுத்துவது என்பது தொடர்பாகவும் தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துவது. என்பது தொடர்பாகவும் தென்னை உற்பத்திக்கு பாதிப்பாக அமைகின்ற காரணிகள் தொடர்பாகவும் குறிப்பாக தென்னைகளுக்கு ஏற்படுகின்ற நோய்கள் மற்றும் அவற்றை எவ்வாறு இல்லாதொழிப்பது என்பது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மேலும் யாழ், கிளிநொச்சி இரண்டிற்கும் பொதுவான வகையில் தெங்கு ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பது தொடர்பாகவும் இடம்பெற்ற கூட்டத்தில் பேசப்பட்டதாக வடக்கு மாகாண தெங்கு செய்கையாளர் சங்கத்தின் செயலாளர் சி.துரைராஜா தெரிவித்தார்.

# அமெரிக்கா சீனாவைச் சமாளிப்பதற்கு மூன்றாவது வழியொன்றைக் காணவேண்டும்

— நாகா —



தென் சீனக் கடல் பகுதியிலுள்ள சில தீவுகள், மீன் வள ஆதாரங்கள் ஆகியவற்றில் சீனா உரிமை கொண்டாடி வருவது, சுற்றியுள்ள அண்டை நாடுகளுடன் சீனாவின் உறவை தொடர்ந்து கசப்பாகவே வைத்துள்ளது.

மேலும், நாளுக்கு நாள் அந்தப் பிராந்தியத்தில் தனது பிடியை சீனா இறுக்கி வருவது அண்டை நாடுகளுக்கும், சீனாவுக்கும் இடையிலான பதற்றத்தை அதிகரித்து வருகிறது.

இந்தச் சூழலில், அன்னிய விமானங்கள் பறப்பதற்கு சீனா விதித்த தடையை மீறி, சர்ச்சைக்குரிய தென் சீனக் கடல் பகுதியில் அமெரிக்கக் கடற்படைக் கண்காணிப்பு விமானம் கடந்த வாரம் பறந்தது.

தென் சீனக் கடலில் தனது நட்பு நாடுகளின் உரிமைகளை சீனா பறிப்பதைத் தட்டிக் கேட்கவே அமெரிக்க விமானம் சீனாவின் தடையை மீறிப் பறந்ததாகக் கூறப்படுகிறது.

மேலும், தென்சீனக் கடல் பகுதியில் சர்வதேச கடல் வர்த்தகப் போக்குவரத்தின் பாதுகாப்பை உறுதி செய்யவும் அமெரிக்கக் கண்காணிப்பு விமானம் அந்தப் பகுதியில் பறந்ததாகக் கூறப்படுகிறது.

ஆனால் இந்த இரண்டிலுமே முழு உண்மை இல்லை என்கிறார்கள் பாதுகாப்பு விவகார நிபுணர்கள் சிலர்.

தென் சீனக் கடலின் பிரச்சினைக்குரிய விவகாரங்களில் நட்பு நாடுகளுக்கு உதவ அமெரிக்கா விரும்பினால், சீனாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள அந்தந்த நாடுகளையே ஊக்கப்படுத்துவதுதான் அமெரிக்காவின் சரியான ராஜதந்திரமாக இருந்திருக்கும் என நிபுணர்கள் வாதிடுகின்றனர்.

மேலும், தென் சீனக் கடல் வழியாகச் செல்லும் வர்த்தகக் கப்பல்களுக்கு, சீனாவால் எந்த ஆபத்தும் இல்லை என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அப்படியென்றால், அந்தப் பகுதியில் அமெரிக்காவின் அதிரடிக்கு வேறு என்னதான் காரணம் இருக்க முடியும்?

ஆதிக்கப் போட்டிதான் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதுவரை தென் சீனக் கடலில் தனிக்காட்டு ராஜாவாக அமெரிக்கா நடத்தி வந்த ராஜ்ஜியத்துக்கு, சீனாவின் அண்மைக் கால அதிரடி முன்னேற்ற நடவடிக்கைகள் சவால் விட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அதனால்தான் அந்தப் பகுதியில் சீனாவின் முன்னேற்றத்தைத் தடுக்கும் வகையில், சீனாவுக்குப் போர் பயத்தை உண்டாக்க அமெரிக்கா இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகிறது.

ஆனால், அமெரிக்காவின் இந்த வியூகம் பலிக்காது என்று எச்சரிக்கின்றன அந்த நாட்டு ஊடகங்கள். பனிப்போர் காலத்தில் அமெரிக்காவும், சோவியத் ரஷியாவும் எவ்வளவுதான் ஒன்றையொன்று சீண்டிக் கொண்டாலும், எதிரி நாட்டின் இராணுவ வலிமையை பரஸ்பரம் உணர்ந்து ஓர் எல்லையுடன் நிறுத்திக் கொண்டன.

அதனால்தான் ஏறத்தாழ உலகின் அனைத்துப் பகுதிகளிலும் மறைமுக யுத்தம் நிகழ்த்தினாலும் அமெரிக்காவுக்கும், சோவியத் ரஷியாவுக்கும் இடையே நேரடியாக ஒரு சிறு மோதல் கூட ஏற்படவில்லை.

அப்படி ஏற்படும் சிறு மோதல், இரு நாடுகளையும் சுடுகாடுகளாக்கிவிடும் என்று இரு தரப்பினரும் நன்றாகவே உணர்ந்திருந்தனர்.

25 ஆண்டுகளுக்கு முன்பு சீனாவுடன் போர் ஏற்பட்டிருந்தால்கூட அமெரிக்காவால் அதன் தலையில் தட்டி உட்கார வைத்திருக்க முடியும்.

ஆனால் தற்போதைய சீன இராணுவத்தின் வலிமை, வீழ்த்தவே முடியாது என்று கருதப்பட்ட அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல்களையும் மூழ்கடிக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளது.

எனவே, தென் சீனக் கடல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சீனாவின் முன்பு முஷ்டியையும் மடக்காமல், அவமானகரமாக பின்வாங்கியும் செல்லாமல் மூன்றாவதாக ஒரு சிறந்த வழியைக் கண்டுபிடிப்பது அமெரிக்காவுக்குக் காலத்தின் கட்டாயமாகியுள்ளது.

பிறர் துன்பங்களைக் கேட்டு அவர்களுக்கு ஆறுதல் கூறுங்கள். உங்கள் துன்பங்களை உங்களிடமே வைத்திருங்கள். -பீச்சர்.

தினப்பதிப்பு
தினமுரசு THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## எனது மொழியை பேசாதவர் எனில்...

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற பழமொழி, புதுமொழியைக் கற்பதுக்குப் பொருந்தாது.

தன் ஐம்பது வயதிலும் கூட புதுப்புது கணனி மொழிகளை உருவாக்குவதிலும், கற்பதிலும் மனிதன் கணனியோடு போட்டியிடும் போது, சக மனிதர்கள் பேசும் இன்னொரு மொழியைக் கற்பது ஒன்றும் கஷ்டமானதாக இருக்கப் போவதில்லை.

எதையுமே படிக்க வேண்டும் என்ற பதற்றத்தில் படித்தால் அது மூளையில் ஏறுவதில்லை. ஆனால், எந்த நிபந்தனையும் இன்றி எதையாவது கேட்டால் கூட அது எளிதில் நம்மிடம் அடைக்கலம் ஆகிவிடுகிறது.

ஒரு வருடம் முழுவதும் பரீட்சைக்காகப் படிக்கும் இரண்டு அடி திருக்குறள் மனதில் நிற்பதில்லை. மாறாக, ஒருமுறை கேட்ட சினிமா பாடல், இசையோடு வாழ்நாள் முழுவதும் நம்மோடு தங்கி விடுகிறது.

அது ஒருபுறமிருக்க, மொழியின் மூலமே பிரிந்து பகையுணர்ச்சியை மேலும் மேலும் வளர்த்துக்கொண்டிருக்கும் இந்நாட்டு மக்களை அந்த மொழிகளைப் பயன்படுத்தியே இணைப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடி" என நாம் பெருமையுடன் கூறிக்கொண்டாலும், உலகில் தோன்றிய முதல் மொழி எது என்பதில் ஐயப்பாடுகள் உள்ளன.

எழுத்து வடிவம் கொண்ட மொழிகளும், வெறும் பேச்சு வழக்கில் மட்டுமே உள்ள மொழிகளும் உலகில் பல உள்ளன. ஒரே மொழியைக் கோடிக்கணக்கானோர் பேசுவதும், இன்னொரு மொழியை ஒருசிலரே பேசுவதையும் காணலாம்.

உலகில் சுமார் 6900 மொழிகள் உள்ளன என்பது ஆச்சரியமான செய்திதான். இந்தியாவில் மட்டும் 1,652 மொழிகள் உள்ளன என்று தெரியவந்திருக்கிறது. பத்து லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பேசும் மொழிகளே அங்கு 30 உள்ளன.

மனிதன் மட்டும் அல்லாமல் உலகின் எல்லா உயிர்களும் தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றன. நல்ல மழை பெய்து, குளங்கள் எல்லாம் நிறைந்திருக்கும் காலங்களில் தவளைகளின் இன்னிசைக் கச்சேரியைக் கிராமத்தில் வாழ்ந்தவர்கள் கேட்டிருப்பார்கள்.

அவற்றுக்குள் என்ன கருத்துப் பரிமாற்றம் நடக்கிறது எனத் தெரியவில்லை. ஆனால் கண்டிப்பாக ஒன்றுக்கொன்று கருத்துப் பரிமாறுகின்றன என்பது உண்மை.

தவளைகளைப் பற்றி இன்னோர் ஆச்சரியமான செய்தி. அவை பிற பூச்சி போன்ற உயிரினங்களின் சத்தத்தில் இருந்து அதன் அளவைப் புரிந்து கொண்டு, அதன்பின்பே அவற்றைப் பிடித்து உண்ணும்.

அதற்கு முன், சிறிதாக இருந்தாலும், பெரிதாக இருந்தாலும், பட்டினியால் சாகுமே தவிர அதை உண்ண முயற்சி செய்யாது. உணவில் கூட மொழி பங்கு பெறுவதை இது உணர்த்துகிறது.

க, கா எனும் காகமும், கி, கீ எனும் கிளியும், கு, கூ எனும் குயிலும் தம் குரலை மாற்றுவதில்லை. குரலின் ஏற்ற இறக்கங்களால் தம் இனத்துக்கோ பிறவற்றுக்கோ வெவ்வேறு செய்திகளைப் பகிர்ந்து கொள்கின்றன. உலகின் எல்லா உயிர்களும் அப்படியே.

ஆனால் மனிதன் மட்டுமே புதுப்புது மொழிகளைக் கற்கும் வல்லமை உள்ளவன். அதைப் பயன்படுத்திக் கொண்டால் பிரச்சினை தீர்ந்துவிடலாம்.

ஏனென்றால் மொழியால் பிரிந்திருக்கும் பகைமைதானே நம்முடையது!

- ஆசிரியர்

# பொதுத்தேர்தலின் பின்னரும் தேசிய அரசுதான்

## அமைச்சர் ரவி சொல்கிறார்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றி பெறச் செய்து, திட்டமிடப்பட்டதைப் போல நாட்டிற்குச் சேவையாற்ற தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதாக நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்தார். அந்த தேசிய அரசாங்கத்திலும் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராக இருப்பார் என்றும் அவர் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ என்பவர் இந்நாட்டு மக்களின் வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்ட ஒரே ஜனாதிபதியாகும். அவரைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. அவர் மக்கள் வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்ட ஒருவர். அவர் எமக்கு சவாலுக்குரியவர் அல்ல.

முன்னாள் ஜனாதிபதிகள் நாடாளுமன்றத்திற்கு வந்த பின் ஆசன உறுப்பினர்களாக இருந்த வரலாறு எங்குமில்லை.

அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி பெற்று மைத்திரிபால சிறிசேன சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் நிச்சயமாக தேசிய அரசாங்கம் ஒன்றை அமைபபார்.அந்த அரசாங்கத்தில் ரணில விக்ரம சிங்கவே பிரதமராக இருப்பார்.

ராஜபக்ஷ அரசு இந்நாட்டுப் பொருளாதாரத்தை சுரண்டி எடுத்திருக்கின்றது. மக்களின் பைகளுக்குச் செல்ல வேண்டிய பணத்தை தமது பைகளுக்குள் போட்டுக் கொண்டவர்கள் அவர்கள். இன்னும் வெட்கமில்லாமல் அதிகாரப்பசியுடன் செயற்படுவதைக் காணமுடிகின்றது.

வெள்ளை வான் கலாசாரத்தினால் நாட்டில்எத்தனை பேரை இல்லாமல் செய்திருக்கின்றார்கள்? நாடு முழுவதிலும் புதையல் தோண்டினார்கள்.

பாதுகாப்புப் படையின் தலைமைச் செயலகத்தினை நிர்மாணிப்பதற்காக 20 பில்லியன் ரூபா ஒரு புறத்தில் 2000 கோடி என்று சொல்லுகின்றார்கள். மறு புறத்தில் 5000 கோடி என்று கூறி நூற்றுக்கு இரண்டரை வீதம் கட்டடக்கலை வல்லுநருக்கு கட்டணம் செலுத்துகின்றார்கள்.

லங்கா ஹொஸ்பிட்டல், மிக் கொடுக்கல் வாங்கல்கள் என வைத்துக் கொண்டு இலஞ்ச ஊழல ஆணைக்குழுவுக்குச் செல்ல முடியாது என்று கூறுகினறார்கள்.

தம்மிடம் தவறில்லாவிட்டால் எம்மைப் போல விசாரணைகளுக்கு பயமின்றி ஏன் செல்ல முடியாது?

கடந்த பத்து வருடத்தில் இவர்கள் செய்த தவறுகள் அனைத்தையும் எம்மால் இந்த 100 நாளினுள் சரி செய்ய முடியாமல் போனது உண்மையே. என்றாலும் நாம் அதிகமானவற்றை, பல நல்ல விடயங்களை நாட்டுக்காகச் செய்திருக்கின்றோம்.

19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் சுத்தமான, ஊழலற்ற ஆட்சிக்கான வழியை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், அனைவரினதும் வருமானத்தை அதிகரிப்பதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# போதைப் பாக்கு வியாபாரம் யாழ். குடாவில் விஸ்வரூபம்

யாழ்.குடாநாட்டில் போதையூட்டப்பட்ட பாக்கு விற்பனை அதிகரித்திருக்கும் நிலையில். குறித்த பாக்கு பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களால அதிகம் பயன்படுத்தப்படுவதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக். காட்டியுள்ளனர்.

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் குறித்த பாக்கு விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதும் மற்றைய இடங்களில் குறித்த பாக்கு விற்பனை அதிகளவில் நடைபெற்று வருகின்றது.

ஒரு பொட்டலம் 50 ரூபா என்ற விலையில் விற்பனை செய்யப்படும் நிலையில் பாடசாலை மாணவர்களால் இந்த பாக்கு அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது.

இந்த பாக்கு செய்வதற்காக சீவப்பட்ட பாக்கு சுண்ணாம்பில் ஊற வைக்கப்படுவதுடன், குழந்தைகளுக்கு பயன்படுத்தும் ஓடிக்கொலன் இதில் சேர்க்கப்படுவதுடன் இதில் கலக்கப்படும் முக்கியமான போதை பவுடர் இந்தியாவிலிருந்து வருவதாக கூறப்படுகின்றது.

எனினும் இந்தப் பவுடர் மற்றவர்களுக்கு காண்பிக்கப்படுவதில்லை.

குறித்த பாக்கு வியாபாரத்தை கட்டுப்படுத்துமாறு பல்வேறு தரப்புகளிடமிருந்தும் அழுத்தங்கள் வரும் போதும் இதனை கட்டுப்படுத்தவோ மாணவர்கள் இதனை பயன் படுத்துவதை தடுக்கவோ முடியாத நிலையில் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். நீதிமன்றத் தாக்குதல்; மேலும் 14 பேர் கைது

யாழ்நீதிமன்ற கட்டடத்தொகுதி மீது தாக்குதல் மேற்கொண்டார்கள் எனும் சந்தேகத்தில் மேலும் 14 பேரை கடந்த இரு தினங்களில் பொலிஸார் கைது செய்துள்ளனர். அதேவேளை புங்குடுதீவு மாணவியின் படுகொலைக்கு நீதி கோரி இடம் பெற்ற போராட்டங்களின் போது அதனுள் ஊடுருவி வன்முறையில் ஈடுபட்டவர்களை பொலிஸார் தொடர்ந்து தேடிவருகின்றனர்.

கடந்த 19ஆம் திகதி யாழ். நகரில் கூடிய குழுவொன்று யாழில் "இன்றைய தினம்" கடையடைப்பு எனக் கூறி யாழ்.நகரில் உள்ள அனைத்து கடைகளையும் கட்டாயப்படுத்தி மிரட்டி பூட்ட வைத்தனர்.

மறுநாள் 20ஆம் திகதி யாழ். நீதிமன்ற கட்டடத தொகுதியை சூழவுள்ள பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு இடையில் ஊடுருவிய குழுவொன்று திடீர் என வன்முறையில் இறங்கி நீதிமன்ற கட்டடத் தொகுதி மீது கல்வீசி தாக்குதலை மேற்கொண்டனர்.

அதனை அடுத்து அன்றைய தினம் வன்முறைகளில் ஈடுபட்டார்கள் எனும் சந்தேகத்தில் 130 பேரை ்கைது செய்து பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தி இருந்தார்கள். அவர்கள் அனைவரும் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந் நிலையில் தற்போது நீதிமன்றக் கட்டட தொகுதி மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கொழும்பு குற்றத்தடுப்பு புலனாய்வுத் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை அடுத்து குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் கடந்த 19 மற்றும் 20ஆம் திகதிகளில் யாழில் வனமுறைகளில் ஈடுபட்டவர்களை கைது செய்யும் நோக்குடன் தேடிவருகின்றனர்.

இரு நாட்களிலும் ஊடகங்களில் வெளியான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் மற்றும் அன்றைய தினங்களில் சிவில் உடையில் நின்ற பொலிஸ் மற்றும் இராணுவப் புலனாய்வாளர்களினால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களில் இனம் காணப்பட்ட சிலரை தேடி வருகின்றனர்.

தேடப்படும் நபர்களில் பலர் யாழ்.நகர் பகுதிகளில் உள்ள கடைகளில் வேலை செய்வோர் மற்றும் நகரில பழ கடைகளில் வியாபாரத்தில் ஈடுபட்ட நபர்கள் என தெரியவருகின்றது. தேடப்படும் நபர்களில் பலர் தற்போது தலைமறைவாகி உள்ளனர் எனவும் அவர்களை தொடர்ந்து தேடி வருவதாகவும் யாழ்.பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஊரை விட்டு வெளியேற வித்தியாவின் குடும்பம் முடிவு

கடத்தப்பட்டு, கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மாணவி வித்தியா சிவலோகநாதனின் குடும்பத்தினர், பாதுகாப்புக் காரணங்களுக்காக, புங்குடுதீவை விட்டு வெளியேறத் தீர்மானித்துள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து கொழும்பு ஆங்கில நாளிதழிடம் தகவல் வெளியிட்டுள்ள வித்தியாவின் தாய், சரஸ்வதி சிவலோகநாதன், தமது பாதுகாப்பு கருதி, வவுனியாவில் தனது உறவினர்களுடன் குடியேறவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தனது மகளின் படுகொலைக்குக் காரணமான சந்தேக நபர்களின் குடும்பத்தினர், புங்குடுதீவில் தமது வீட்டுக்கு அருகே வசிக்கின்ற நிலையிலேயே, அச்சம் காரணமாக தாம், அங்கிருந்து வெளியேறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வித்தியாவின் 45 ஆவது நாள் இறுதி சமயக் கிரியைகள் முடிந்தவுடன், தனது ஏனைய இரு பிள்ளைகள் மற்றும் கணவரின் பாதுகாப்புக் கருதி, புங்குடுதீவை விட்டு வெளியேறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசியல் தலைமையற்றதா ஈழத்தமிழினம்?

## சமூக உறவிற்கும் அரசியல் தலைமைத்துவத்திற்கும் தொடர்பு உண்டா?

- நடேசன்

மனைவியை அதிகம் நேசிக்க யன்னலுக்கு வெளியே நின்று பார்க்க வேண்டும் என்பார்கள். திருமண உறவில் மட்டுமல்ல மற்றைய விடயங்களிலும் வெளியே நின்று பார்க்கும்போது உண்மைகள் தெளிவாக புலப்படும்.

சமீபத்தில் ஆபிரிக்கா சென்று பின்பு சில விடயங்களைப் படித்ததில் ஆபிரிக்காவில் நிலங்களில் விவசாயம் செய்து வந்த சமூகங்களில் தந்தை வழிசமூகம் பற்றி அறியமுடிந்தது. தந்தை, பின்பு மகன் என குடும்பத்தலைமை தொடர்வதால் தலைமைத்துவம் உருவாகிவிடுகிறது. தந்தையின் பின் மகன், இல்லாதவிடத்து தம்பி அந்தச் சமூக கூட்டத்திற்கு தலைமையேற்று விடுகிறான். ஆபிரிக்காவின் இந்த இடங்களில் ஐரோப்பியர்கள் அதிகாரம் செலுத்தும் போது, அவர்கள் இப்படியான தலைவர்கள் மூலமாக வரி அறவிடல் மற்றும் யுத்தத்துக்கு ஆள்சேர்த்தல் என்பதான விடயங்களை செய்தார்கள். ஐரோப்பியரின் காலனி ஆதிக்கத்தின் வண்டியில் இந்த சமூகத் தலைவர்கள் சக்கரமாக இருந்தார்கள்.

ஆபிரிக்காவின் சில இடங்களில் தலைமை இல்லாத சமூகங்கள் இருந்தன. கால்நடைகள் ஆபிரிக்கர் மத்தியில் முக்கிய செல்வமாக மதிக்கப்படுவதால் ஓரளவு அதிக கால்நடை வைத்திருப்பவர்கள், அல்லது நிலம் வைத்திருந்தவர்களிடம் ஐரோப்பியர் அதிகாரத்தை கொடுத்து சமூகத் தலைவர்கள் (Tribal chief) ஆக்கிவிட்டார்கள். ஐரோப்பியர்களால் மக்களிடம் நேரடியாக செல்லமுடியாது அத்துடன் மக்கள் பிரதிநிதிகள் என புதியவர்களை நியமித்து ஜனநாயகத்தை உருவாக்கவும் விருப்பமில்லை. ஆனால் சமூகத்தில் ஐரோப்பியர் உருவாக்கிய இப்படியான திடீர் தலைமைகள் பிரச்சினைக்கு உரியதாகிறது. இந்தப் புதியவர்களின் அதிகாரத்திற்கு பலவிதங்களில் அபாயம் வரும். வேறு ஒருவர் பல மாடுகளுக்கு சொந்தக்காரராகி விட்டாலோ அல்லது நோயால் மாடுகள் இறந்தால் அவரது தலைமைக்கு கேள்வி வந்துவிடும். பாரம்பரியத் தலைமையுள்ள இடங்களில் இந்தப் பிரச்சினை இல்லை.

### எனது சொந்தக்கதை

இதேபோன்ற அமைப்பு, நமது ஊரிலும் உள்ளது. எனது தாய்வழிப் பாட்டனால் ஊரில் அவரது படிப்பு உத்தியோகம் மற்றும் குணத்தால் ஊரில் அவர் பெரியவராக மதிக்கப்பட்டார். அந்த வாத்தியாரிடம் ஆலோசனைக்கும் உதவிக்கும் வருவோர் பலரை சிறுவயதில் கண்டுள்ளேன்.

அவரது முதுமை வயதில் அவரது இரண்டு ஆண் பிள்ளைகள் மற்றைய ஊர்களில் திருமணமாகி வெளியேறினார்கள். அவரது இரண்டு பெண்பிள்ளைகளை அதாவது எனது பெரியம்மாவையும் அம்மாவையும் முறையே அனலைதீவிலும் நயினாதீவிலும் இருந்து வந்து திருணம் முடித்தவர்கள் எனது தந்தையும் பெரியப்பாவும். ஆனால் இவர்களால் எனது பாட்டனின் இடத்திற்கு சமூகத்தில் போகமுடியவில்லை. ஊரில் பிற்காலத்தில் சில சண்டைகள் வந்தன. பாட்டாவின் இடத்தை நிரப்ப பலர் விரும்பினார்கள். ஆனால், சண்டையில்தான் முடிந்தது என்பதை இப்பொழுது நினைத்துப் பார்க்கின்றேன்.

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு வெளியே நிலை வேறு மாதிரியாக இருக்கிறது. சிங்கள சமூகத்தில் மற்றும் இந்திய தொடர்புள்ள தமிழ்ச்சமூகத்தில் கணவனின் வீட்டில் திருமணத்தின் பின்பு மனைவி சென்று வாழ்வது வழக்கம். இதனால் சமூகத்தில் ஆண்கள் மத்தியில் சமநிலை உருவாகிறது.

### தமிழ் அரசியலில் இது பாதிப்பை உருவாக்குகிறதா?

பலருக்குத் தெரிந்தவரையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வநாயகம் தனி மனிதராக நேர்மையானவர். எந்த அப்பழுக்கும் அற்றவராக சரித்திரத்தில் இடம்பெற்றவர். ஆனாலும் தமிழ் காங்கிரசில் இருந்து பிரிந்து தமிழரசுக்கட்சி தொடங்கியதும் அவருடைய நடவடிக்கைகள், தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலத்தினால் ஏற்பட்ட பயத்தில் உருவாகியவை. இதற்காக தமிழர் பிரச்சினைகள் இல்லையென்று சொல்லவில்லை.

ஆனால் மிகைப்படுத்தப்பட்டவையே தமிழரசுக்கட்சியின் பெரும்பாலான கோசங்களாக (Rhetoric) இருந்தன. இப்படியான கோசங்களை சட்டக்கல்லூரிகளில் கிரேக்க கல்வி முறையில் கற்பித்ததால் இந்த தமிழ் சட்டத்தரணிகளுக்கும் இலகுவாக வந்தது.

மக்கள் மத்தியில் உணர்வுகளை எழுப்பும் கோசங்களை அறிவதற்கு, சேக்ஸ்பியரின் மார்க் அன்ரனி பேசுவது உதாரணம். ரோமன் செனட்டில் ஜுலியஸ் சீசரின் கொலைக்கு உடந்தையாக இருந்த புருட்டஸ்ஸுக்கும் மற்றவர்களுக்கும் எதிராக ரோமன் மக்களை கிளர்ந்து எழுச்சிகொள்வதற்கு மார்க் அன்டனி பேசும் வார்த்தைகளில் பாவிக்கும் கோசங்கள் உதாரணமானவை.

> **கிழக்கு மாகாணத்தில் 1972 இல் 65 வீதத்துக்கு மேற்பட்டவர்களாக இஸ்லாமியரும் சிங்களவரும் இருந்தபோது ஜனநாயகத்தில் வடக்கு கிழக்கு இணைந்த தமிழ்ஈழம் எப்படி இது சாத்தியமாகும்? இப்படியான கோரிக்கைகளை இவர்கள் வைத்தபோது இவர்கள் இந்த கோரிக்கைகளை உண்மையாக நம்பினார்கள் என்று சொல்லி இவர்களது அறிவை குறைத்து மதிப்பிட முடியாது.**




அமிர்தலிங்கத்தின் தலைமையில் தனது இரண்டாவது இடத்தில் இருந்த மட்டக்களப்பு உறுப்பினரான இராசதுரையை ஓரம்கட்ட எந்தத் தகுதியும் அற்ற காசி ஆனந்தனை மட்டக்களப்பில் போட்டியிட வைத்து தோல்வியடையப் பண்ணியதுடன், இராசதுரையை அரசாங்கக் கட்சிக்கு மாறவைத்த பெருமையின் மூலம் தனது அரசியல் சாணக்கியமற்ற தன்மையை காட்டினார்.

இதேபோல் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுடைய தலைமையை பலர் ஏற்கத் தயாராக இருந்தார்கள். ஆனால் எந்த ஒரு நிழலைக் கூட தனக்கு போட்டியாக நினைத்துப் பயந்து சிறு இயக்கங்களின் தலைவர்களில் இருந்து அமிர்தலிங்கம்வரை தமிழ்த் தலைவர்களைக் கொன்று ஜக் த ரிப்பர் (Jack the Ripper) போன்ற சீரியல் கொலைகாரராக மாறினார்.

இப்படியான நிலைமை பத்மநாபாவைத் தவிர மற்ற இயக்கத் தலைமைகளிடமும் இருந்தது. அந்த மற்றவர்கள் எல்லோரும் தலைமையை தக்க வைப்பதற்காக பயத்திற்கு உட்பட்டார்கள்.

இதற்கு நிச்சயமாக இலங்கைத் தமிழ் சமூக அமைப்பில்தான் காரணம் இருக்கவேண்டும். ஆண்கள் திருமணம் செய்து மனைவியின் ஊருக்கு அல்லது மனைவியின் தரப்பு வீட்டுக்குச் செல்லுகிறார்கள். ஆண்கள் சொந்த வீட்டை விட்டு வெளியேறுவதால் அவர்களால் தந்தையின் தலைமைத்துவத்தைப் பெறமுடியாதது மட்டுமல்ல, புதிய இடத்தில் தங்களை தக்க வைப்பதும் இலகுவான காரியமல்ல.

இதிலும் தலைமைத்துவத்தை நோக்கி அவர்கள் ஆசைப்படும்போது, அங்கும் தலைமைத்துவத்திற்கு போட்டிகள் வரும். அதனால் ஏற்படும் பயம் இவர்களை குறுக்கு வழிகளில் தள்ளுகிறது. இவர்களது உண்மைக்குப் புறம்பான பல விடயங்களை பட்டியல் இடலாம்

இலங்கையில் 25 வீதமான சிறுபான்மையினருக்கு பொன்னம்பலம் 50 வீதம் கேட்டார்.

இலங்கையின் கிழக்கு மாகாணம் எந்தக் காலத்திலும் யாழ்ப்பாண இராச்சியத்தோடு இருந்ததில்லை. ஏன் யாழ்ப்பாண இராச்சியம் முல்லைத் தீவுக்கு அப்பால் போகவில்லை. சரித்திரத்தில் கிட்டத்தட்ட 400 வருடங்கள் மட்டுமே இருந்த யாழ்ப்பாண குறுநில அரசு இந்தியாவில் இருந்த நாயக்கர்களால் (தற்போதைய ஆந்திரர்) உருவாக்கப்பட்டது. இது தமிழரசு?

கிழக்கு மாகாணத்தில் 1972 இல் 65 வீதத்துக்கு மேற்பட்டவர்களாக இஸ்லாமியரும் சிங்களவரும் இருந்தபோது ஜனநாயகத்தில் வடக்கு கிழக்கு இணைந்த தமிழ்ஈழம் எப்படி இது சாத்தியமாகும்?

இப்படியான கோரிக்கைகளை இவர்கள் வைத்தபோது இவர்கள் இந்த கோரிக்கைகளை உண்மையாக நம்பினார்கள் என்று சொல்லி இவர்களது அறிவை குறைத்து மதிப்பிட முடியாது. செல்வநாயகம் அமிர்தலிங்கம் பிரபாகரன் போன்றவர்களால் நிச்சயமாக இந்தக் கொள்கைகளின் எதிர்விளைவைப் புரிந்து கொள்ளும் அறிவு இருந்திருக்கும். ராஜிவ் காந்தியை கொல்லத் தீர்மானித்தபோது அதன் எதிர்விளைவைப் புரியாதவர்தான் பிரபாகரன் என்று நம்பமுடியமா?

மகாபாரத தருமன் போன்ற சூதாடிகள் என்று மட்டுமே எண்ண முடிகிறது. சம்பந்தர், விக்கினேஸ்வரன் என எமது சமூகத்தில் அந்த இடத்தை நிரப்பி வருகிறார்கள்.

### நமக்கு மட்டும் ஏன் இத்தகைய தலைமைகள்?

இப்படியான தலைமையுள்ள சமூகம் தற்கால ஜனநாயகத்தில் மக்களை மயக்கும் கோசங்களை வைத்தோ மற்றவர்களை கொன்றோ தலைமையை தக்கவைக்க முயலுவதன் காரணம் - இந்த ஆண், பெண் உறவில் இருந்து வந்த தொடர்பா என சிந்திக்க வைக்கிறது. இந்தவிடயம் சமூக ஆராய்ச்சியாளர்களுக்குரியது. ஆனாலும் நமது சமூக வித்தியாசங்கள் நமது நடத்தைகளை உருவாக்குகிறது.

**நிச்சயமாக மிருகங்களில் இந்தத் தன்மை உள்ளது. மனிதர்கள் சமூக மிருகங்கள்தானே?**

(சமீபத்தில் தனது முயற்சியால்தான் எஸ்.ரி.எவ் யாழ்ப்பாணம் வரவில்லை என சம்பந்தர் சொன்னதால் மனம் கேட்காமல் எழுதியது.)

# மகிந்தவையும் விசாரணைக்கு அழைப்போம்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, இலஞ்ச ஊழல்கள் ஆணைக்குழுவின் விசாரணைக்கு அழைக்கும் அறிவித்தல் மீண்டும் அனுப்பப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் ஆணையாளர் தில்ருக்சி டயஸ் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் மீதான விசாரணைகள் நடாத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷவை இலஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழு விசாரணைக்கு அழைத்தபோது நாடாளுமன்றத்தில் பாரிய எதிர்ப்பு காட்டப்பட்டது.

இதன்காரணமாக அந்த விசாரணை கைவிடப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி இலஞ்ச ஊழல்கள் ஆணைக்குழுவில் ஆஜராக அவசியம் இல்லை என்ற நிலைப்பாடு குறித்து கருத்துரைத்துள்ள தில்ருக்சி, நாட்டின் அனைத்து மக்களும் சட்டத்தின் முன் சமமானவர்கள் என்று தெரிவித்துள்ளார்.

பணக்காரர்களையும் அதிகாரம் கொண்டவர்களையும் விசாரணை செய்யமுடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் நினைத்தால், சட்டத்தின் முன் ஏழைகளை மாத்திரமா விசாரணை செய்யமுடியும் என்று தில்ருக்சி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்றை இயற்றவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே தமது ஆணைக்குழுவுக்கு வருகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் தம்மால் எவரையும் விசாரணை செய்யமுடியும் என்று தில்ருக்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த விடயத்தில் நாடாளுமன்ற சபாநாயகர் ஒருவருக்கு அரசாங்க சேவையாளர் ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அழைத்து விசாரணை செய்யமுடியாது என்றும் தில்ருக்சி குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே மகிந்த ராஜ பக்ஷ, விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது சபாநாயகர் இலஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணையாளருக்கு விசாரணை அறிவித்தலை அனுப்பியிருந்தார்.

எனினும் அந்தக்காலகட்டத்தில் ஆணையாளர் நாட்டில் இருக்கவில்லை. எனவே ஆணைக்குழுவின் தலைவர் நாடாளுமன்றத்துக்கு பிரசன்னமாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மேர்வின் கூட விரும்பவில்லை



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதம வேட்பாளராக நியமிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக,, நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர், ஊடகவிய லாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உயர்ந்த பதவியில் இருந்த ஒருவர் குறைந்த பதவியில் செயற்படுவது அவசியமற்றதென மேர்வின் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில், களனி தொகுதியில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# அரசுக்கு எதிராக வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம்

## மகிந்த அணியின் அடுத்த நகர்வு

தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராக வீதிக்கு இறங்கி போராட்டங்களை நடத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான அணியினர் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி எதிர்வரும் நாட்களில் வீதிகளில் ஆர்ப்பாட்டங்களையும் , பேரணிகளையும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவிததுள்ளார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராகவும் மற்றும் 20ஆவது திருத்தத்தை நிறைவேறுமாறு கோரியுமே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாய்ப்பு வழங்க மறுத்துள்ளதை தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் அடுத்த கட்ட நடவடிக்கையை முன்னெடுக்க தயாராகி வருகின்றனர். மேல் மாகாண சபை உறுப்பினர் உதயகம்மன்பில இதனைத்தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பல உறுப்பினர்கள் தயாராகவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அநேக நாடாளுமன்ற உறுபபினர்கள் முன்னாள் ஜனாதிபதியின் பின்னால் அணிதிரள்வார்கள், ஏனென்றால் மக்கள் சக்தி அங்கேயே உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு தொடர்ந்தும் அனுமதியளிக்க மறுத்தால் அதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷ வேறு மூன்று கட்சிகளில் எதன் கீழ் போட்டியிடுவது என தீர்மானிப்பார் என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தற்போது அரசியலில் தப்பிப் பிழைப்பதற்காக சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர், அரசாங்கத்துடன் உள்ளனர். ஆனால் எதிர்வரும் தேர்தலில் தங்களுக்கு மக்கள் சக்தி அவசியம் என்பதும் அது முன்னாள் ஜனாதிபதியிடமேயுள்ளது என்பதும் அவர்களுக்குத் தெரியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மோசடி மன்னர்கள் மேலும் 60பேருக்கு வலை வீச்சு



கடந்த அரசாங்கத்தின் 60 முக்கியஸ்தர்களுக்கு எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் மற்றும் முக்கிய பதவிகளை வகித்த 60 பேருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிதி மோசடி, ஊழல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது கிடைக்கப் பெற்றுள்ள விசாரணை அறிக்கைகளின் அடிப்படையில் பொதுத் தேர்தலுக்கு முன்னதாக சில முக்கிய அரசியல்வாதிகள், உயர் அரசாங்க அதிகாரிகளை கைது செய்ய நேரிடும் என அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

# ஊழல் விசாரணை அமெரிக்க நிபுணர்கள் கொழும்பில் தரிப்பு

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும், அதிகாரிகளுக்கு உதவுவதற்காக அமெரிக்க அதிகாரிகள் குழுவொன்று கொழும்புக்கு வந்துள்ளதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில், முன்னைய அரசாங்கத்தில் இடம்பெற்றிருந்த தலைவர்களினால் பதுக்கி வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு விசாரணை அதிகாரிகளுக்கு உதவுவதற்காக, அமெரிக்காவின் உள்நாட்டுப் பாதுகாப்புத் திணைகளம், நீதித் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் குழுவொன்று இந்த வாரம் கொழும்பு வந்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி இம்மாத தொடக்கத்தில் கொழும்புக்கு மேற்கொண்ட பயணத்தின் உடனடி விளைவாகவே, இவர்கள் கொழும்பு வந்துள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போது, வெளிநாட்டில் பதுக்கப்பட்டுள்ள சொத்துக்களைக் கண்டறியவும், உள்நாட்டு விசாரணைகளுக்கு உதவவும் அமெரிக்கா தயாராக இருப்பதாக, ஜோன் கெரி உறுதியளித்திருந்தார்.

இதற்கமைய, கொழும்பு வந்துள்ள அமெரிக்க அதிகாரிகள் குழு, நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு, குற்றப்புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றின் மூத்த விசாரணையாளர்களை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

இதன்போது, தற்போது மேற்கொள்ளப்படும் உயர்மட்ட விசாரணைகள் குறித்து கேட்டறிந்துள்ள அமெரிக்க அதிகாரிகள், வெளிநாட்டில் குறிப்பாக அமெரிக்காவில் பதுக்கப்பட்டுள்ள சொத்துக்களைக் கண்டறிய உதவுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

சொத்துக்கள் பற்றிய பேச்சுக்களின் ஒரு கட்டத்தில், அமெரிக்காவில் இருந்த இராஜதந்திரி ஒருவரின் பங்கு தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, இராஜதந்திர மரபுகளுக்கு முரணாக அவரால் மேற்கொள்ளப்பட்ட நிதிப் பரிமாற்றங்கள் தொடர்பான விபரங்களை அமெரிக்க அதிகாரிகள் கையளிக்கவுள்ளனர்.

அவர் தனது பதவிநிலைக்கு அப்பால், தரகுப் பணியில் ஈடுபட்டு பெருமளவு பணத்தைப் பெற்றுளளது குறித்து, கொழும்பில் அதிகாரிகள் சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர்.

அதேவேளை, முன்னைய அரசாங்கத்தில் சக்தி வாய்ந்தவராக விளங்கிய உள்ளூர் அரசியல் வாதி ஒருவர் குறித்த விபரங்களையும் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு பெற்றுள்ளது.

இவர், லொஸ்ஏஞ்சல்ஸ், ஆலிங்டன், வொசிங்டனில் உள்ள வேர்ஜீனியாவில் தொடர்மாடிகளை கொள்வனவு செய்துள்ளார்.

அமெரிக்காவில் இலங்கைக்கு நற்பெயரை ஏற்படுத்தும் பல திட்டங்கள் தொடர்பான சர்ச்சைக்குரிய இந்த நபரின் ஏனைய முதலீடுகள் மற்றும் இதற்கான நிதி அவருக்கு எவ்வாறு கிடைத்தது என்பது குறித்தும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# சிராந்தி இன்று ஆஜர்



(கொழும்பு)


முன்னாள் முதற்பெண்மணி சிராந்தி ராஜபக்ஷ இன்று காலை நிதிமோசடிகள் தொடர்பான விசேட பொலிஸ் பிரிவின் முன்னிலையில் ஆஜராவார் என அவரது ஊடக இணைப்பாளர் தெரிவித்துள்ளார். கடந்த வாரம் விசேட பொலிஸ் பிரிவினர் இது தொடர்பான உத்தரவை அவரிற்கு அனுப்பிவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிராந்தி இன்று காலை 9.30 மணிக்கு குறிப்பிட்ட பொலிஸ் பிரிவின் அலுவலகத்திற்கு செல்வார் என தெரிவித்துள்ள அவரது ஊடக இணைப்பாளர் அனோமா-வெலிவிட்ட, முன்னாள் முதல் பெண்மணி எப்போதும் அரசியலில் ஈடுபடவில்லை,சிறுவர்கள் குறித்த மனிதாபிமான பணிகளிலேயே ஈடுபட்டார் என குறிப்பிட்டுள்ளார்.

சிராந்தி வெளிநாடுகளிலிருந்து தனது சமூக பணிகளுக்காக நிதியை பெற்றுள்ளார். ஆனால் அவர் இதனை வெளிப்படையாகவே செய்துள்ளார் எனவும் அனோமா தெரிவித்துள்ளார்.

# ஒற்றுமை என்ற பெயரால் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்

## சந்திரகுமார் எம்.பி.கவலை



(கிளிநொச்சி)

தமிழர்களின் ஒற்றுமைப் பலம் சர்வதேசத்திற்கு வெளிப் படுத்தப்பட வேண்டும் என்ற வாக்கியத்தால் தமிழ் மக்கள் ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் ஏமாற்றப்படுகின்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமாகிய மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி ஐயனார்புரத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மக்களின் வாக்குகளைப் பெற்று மக்கள் பிரதிநிதிகளாக வருகின்ற ஒவ்வொருவரும் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவும் உழைக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளனர். அதற்காகவே அரசாங்கம் மக்கள் பிரதிநிதிகளுக்கு சலுகைகளை வழங்குகின்றது. அதிலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அதிகபட்ச சலுகைகள் வழங்கப்படுகின்றன. அதில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடு காட்டப்படுவதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அனைவருக்கும் சமமான வசதிகள் வழங்கப்படுகின்றன.

ஆனால், மக்களின் பெயரால் அந்த சலுகைகளைப் பெறும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர், மக்களுக்கு சேவையாற்ற முன்வருவதில்லை. மீள்குடியேற்றத்தின் பின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் மீது உண்மையாகப் பற்றுக்கொண்டு அர்ப்பணத்துடன் உழைத்திருந்தால் இன்று மக்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்பட்டிருக்கும். மக்களின் தேவைகள் பல நிவர்த்தி செய்யப்பட்டிருக்கும்.

ஆனால், மக்கள் பிரதிநிதிகளானதும் அவர்கள் சாதாரண மக்களைவிட மேலானவர்கள் என்ற தோற்றப்பாட்டைக் காட்டுவதற்காக மக்கள் மத்தியிலிருந்து அந்நியப்பட்டு வாழத் தொடங்குகின்றனர்.

அவர்கள் மக்களைத் தேடிச் செல்வதில்லை. மக்களின் பிரச்சினைகள், தேவைகள் குறித்து அறிந்துகொள்ள முயற்சிப்பதில்லை. மாறாக, ஊடகங்கள் வாயிலாகவே மக்களுக்கு தமது இருப்பை அறிவித்துக்கொண்டிருக்கின்றனர்.

இன்று கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் தாம் வாக்களித்து தெரிவு செய்த நாடாளுமன்ற உறுப்பினர்களையோ, மாகாண சபை உறுப்பினர்களையோ, பிரதேச சபை உறுப்பினர்களையோ தெரியாதிருக்கின்றனர்.

அதுமட்டுமன்றி, துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் கூட தமக்கு பொறுப்பான அமைச்சர்களையோ தெரிந்திருக்காத நிலையே காணப்படுகின்றது.

அந்தளவுக்கு அவர்களின் சேவைகள் முடங்கிப் போயுள்ளன. இதனால் மக்கள் தமது தேவைகள், பிரச்சினைகளை யாரிடம் தெரிவித்து தீர்வினைப் பெற்றுக்கொள்வதென்று தெரியாது தவித்துக்கொண்டிருக்கின்றனர் என்றார்.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சபாநாயகம் ஆகியோரும் மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளர்களும் பெருமளவான மக்களும் கலந்துகொண்டனர்.

# தாவீது அடிகளாரின் நினைவு தின விழா

(யாழ்ப்பாணம்)

பன்மொழிப்புலவர் அருட்கலாநிதி தாவீது அடிகளின் 34 ஆவது ஆண்டு நினைவுதின விழா இன்று திங்கட்கிழமை தும்பளை புனித லூர்து அன்னை ஆலய அருகாமையில் புனித மரியாள் சனசமூக நிலையத்தலைவர் எம்.ஜெயரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அடிகளாரின் நினைவு தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்களும், க.பொ.த.(சா/த) தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பும் இடம்பெறுமென்றும் தாவீது அடிகள் நினைவுக்குழு இணைப்பாளர் எஸ்.அந்தோனிமுத்து அறிவித்துள்ளார். (01)

# மீலாத் போட்டிகள்


(யாழ்ப்பாணம்)

முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டு அலுவல் அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய மீலாத் விழா 2015 இற்கான பாடசாலை மட்ட மீலாத் போட்டிகள் கடந்த வாரம் யாழ்.கதீஜா பெண்கள் கல்லூரியில் நடைபெற்றன.

இப்போட்டியில் கிராம், ஹிபிள், பேச்சு, அரபு எழுத்தனி, கட்டுரை, கவிதைப் போட்டிகள் இடம் பெற்றன. அதிபர் ஏ.ஸி. ஜான்ஸி தலைமையில் ஆசிரியைகளான எம்.எஸ்.பாத்திமா, பதீனா மௌலவியா, ஏ.மூஜீபா, ஏ.ஹில்மியா ஆகியோருடன் 40 மாணவிகள் போட்டியில் பங்கு பற்றினார்கள்.

பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் தெரிவு செய்யப்படுவோர், மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்ற தகைமையுடையவராவர். மாகாண ரீதியிலான போட்டியில் தெரிவானோர் அகில இலங்கை ரீதியிலான போட்டியில் பங்குபற்றுவார்கள் என அதிபர் தெரிவிக்கின்றார். (105)

# ஹாட்லிக் கல்லூரிக்கு புதிய ஒன்றுகூடல் மண்டபம்



பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியில் சுமார் 35 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஒன்று கூடல் மண்டபம் அண்மையில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் ரீ.முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், வடமாகாண கல்வி அமைச்சர் ரி.குருகுலராஜா சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு நாடாவை வெட்டி மண்டபத்தை திறந்துவைத்தார்.

இந்த நவீன ஒன்று கூடல் மண்டபத்திற்காக 'நிக்கொட்' நிறுவனம் 7 மில்லியன் ரூபாய்களையும், 'என்றிப்' நிறுவனம் 20 மில்லியன் ரூபாய்களையும், வடக்கு மாகாணசபை 8 மில்லியன் ரூபாய்களையும் வழங்கியுள்ளதாக கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த மண்டபம் ஹாட்லி கல்லூரியின் பிரதான வாயிலுக்கு முன்பாக கல்லூரி வீதியின் அடுத்த பக்கத்தில் அமைந்துள்ளது.

# கொட்டடி சனசமூக நிலையத்தின் புத்தாண்டு தின விழா

(வேலணை)

யாழ்.கொட்டடி சனசமூக நிலையத்தினரும் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடாத்தும் புத்தாண்டு கலைவிழாவானது எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சீனிவாசகம் வீதியில் அமைந்துள்ள சனசமூக நிலைய முன்றிலில் அமைந்துள்ள மண்டபத்தில் சிறப்பான முறையில் கொண்டாடப்படவுள்ளது.

நிலையங்களினது தலைவர் கலாநிதி நா.தனேந்திரன் (ஜே.பி) தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக இந்திய அரசினது இலங்கைக்கான துணைத்தூதுவர் நடராஜன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடாதிபதி வேல்நம்பி கலந்து கொள்கின்றார்.

அன்றைய தின விழாவில் கிராமத்தில் பொதுச் சேவைகளில சிறப்பான முறைகளில் சேவையாற்றிய, சேவைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றவர்களையும் மற்றும் கிராமத்தின் மக்களால் மதிக்கப்பட்டு வருகின்றவர்களைக கௌரவிக்கும் வகையில் "சமூக திலகம்", "இரத்தின தீபம்" என்ற சிறப்பு பட்டங்களையும் விருதுகளையும் வழங்கி வைப்பதுடன் மரதன் ஓட்டப் போட்டி, பொது அறிவுப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம் பெறவுள்ளது. (05)

# கலை கலாசார பேரவைக்கு புதிய அங்கத்தவர்கள் தெரிவு

யாழ்.மாவட்ட கலைகலாசார பேரவையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்விற்கு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் தலைமை தாங்கியிருந்தார்.

குறித்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாகத்தின் படி தலைவராக மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகம், செயலாளராக செல்வச்சந்திரன், பொருளாளராக இராசரத்தினம், உப செயலாளராக விஜயன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 15 பிரதேச செயலகங்களின் அடிப்படையில் ஒவ்வொரு உறுப்பினர்களும், செயற்குழு உறுப்பினர்களாக மேலும் ஐவரும் இக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். இதே வேளை குறித்த பேரவையின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்ற போதிலும் நிர்வாகத் தெரிவுக் கூட்டம் நீண்ட காலமாக நடைபெறாதிருந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் நடைபெற்றிருந்தமை குறிபிடத்தக்கதாகும்.

# தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இதன் தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம் பெறவுள்ளது.

இதேவேளை நேற்று ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழா நடைபெற்றதுடன் நாளை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## முரசின் இன்றைய பலன்

(01.06.2015 திங்கட்கிழமை)

மன்மத வருஷம் வைகாசி மாதம் 18 ஆம் திகதி.
மரண யோகம். சதுர்த்தசி திதி.
விசாக நட்சத்திரம் முன்னிரவு 07.31 வரை. பின் அனுசம்.
இராகுகாலம் 07.22-08.52 வரை சுபநேரம் 11.52-01.22 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: பேச்சில் நிதானத்தைக்கடைப் பிடிப்பதும்பிறரை அனுசரித்து நடப்பதையும் கைவிட வேண்டாம்.

**ரிஷபம்**: தொடுத்த காரியங்களில் எதிர் நீச்சல் போட வேண்டி நேரிடும்.

**மிதுனம்**: தொலைந்த ஆவணத்தை பகீரதப் பிரயத்தனத்தின் பின் கண்டு பிடித்தல்.

**கடகம்**: பணவரவுகள் தேவைக்கேற்ற படியிருப்பதால் சமாளிக்கும் ஆவல் இருக்கும்.

**சிம்மம்**: உரிய வேளைக்கு மனைக்கு வராத பிள்ளையை எண்ணி அச்சமும் பதகளிப்பும் ஏற்படல்.

**மீனம்**: தேகநலம் அலைச்சலினால் பாதிக்கப்படலாம்.

**கன்னி**: குடும்ப அங்கத்தவர் ஒருவர் திடீரென நோய்க்கு ஆளாகலாம்.

**கும்பம்**: அவசரக் குடுக்கையினால் பொருட்களை இழந்து விடலாம்.

**மகரம்**: பணக் கொடுக்கல் வாங்கலில் நம்பகமும் அவதானமும் மிக அவசியம்.

**தனுசு**: வேலையாட்கள் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தி நிம்மதிக்குறைவினை ஏற்படுத்தல்.

**விருச்சிகம்**: வியாபாரப் போட்டியினால் மனத் தாங்கலும் பகைமை உணர்வும் ஏற்படல்.

**துலாம்**: அரச உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுடன் சுமுக உறவைப் பேணலாம்.

## இங்கிலாந்தின் முதல்வன்



நியூசிலாந்து அணியுடன் ஹெடிங்லி மைதானத்தில் நடைபெற்றுவரும் 2ஆவது டெஸ்டின் முதல் இனிங்ஸில் இங்கிலாந்து கப்டன் அலஸ்டர் குக் அபாரமாக விளையாடி 75 ஓட்டங்களைக் குவித்தார். இதன்போது 31 ஓட்டங்களைப் பெற்றபோது, டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்த இங்கிலாந்து வீரர்கள் பட்டியலில் முதல் இடத்தில் இருந்த கிரகாம் கூச் சாதனையை (8,900 ரன்) சமன் செய்தார். தொடர்ந்து சிறப்பாக விளையாடி அரைச்சதம் அடித்த அவர் முதலிடத்துக்கு முன்னேறி அசத்தினார்.

2006ஆம் ஆண்டு நாக்பூரில் இந்திய அணிக்கு எதிராக களமிறங்கிய அறிமுக டெஸ்ட் போட்டியிலேயே சதம் விளாசி அமர்க்களப்படுத்திய குக், இதுவரை 114 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 8,900 ஓட்டங்கள் குவித்துள்ளது (அதிகம் 294, சராசரி 47.05, சதம் 27, அரை சதம் 41) குறிப்பிடத்தக்கது.

## 27ஆவதுது முறையாக பார்சிலோனா சம்பியன்




(பார்சிலோனா)

கோபா டெல் ரே கோப்பை கால்பந்து தொடரில் பார்சிலோனா அணி சம்பியன் பட்டம் வென்றது.


ஸ்பெயினில், உள்ளூர் கால்பந்து கிளப் அணிகள் பங்கேற்கும் கோபா டெல் ரே கோப்பை கால்பந்து தொடர் ஆண்டு தோறும் நடாத்தப்படும். பார்சிலோனாவில் நடைபெற்ற 2014-15 சீசனுக்கான இறுதிப் போட்டியில், பார்சிலோ்னா, அத்லெடிகோ பில்பாவோ அணிகள் மோதின.

ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சி முதல் கோல் அடித்தார். பின், 36ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் நெய்மர் தன்பங்கிற்கு ஒரு கோலடித்தார். முதல் பாதி முடிவில் பார்சிலோனா அணி 2-0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் அசத்திய பார்சிலோனாவின் மெஸ்சி, 74ஆவது நிமிடத்தில் 2ஆவது கோல் அடித்தார். தொடர்ந்து போராடிய அத்லெடிகோ பில்பாவோ அணிக்கு 79ஆவது நிமிடத்தில் வில்லியம்ஸ் ஒரு கோல் அடித்து ஆறுதல் தந்தார். ஆட்டநேர முடிவில் பார்சிலோனா அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இதன்மூலம் இத்தொடரில் அதிக முறை கோப்பை வென்ற அணிகளுக்கான பட்டியலில் பார்சிலோனா அணி தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. இதுவரை 37 முறை இறுதிப் போட்டியில் விளையாடிய பார்சிலோனா அணி 27 முறை வெற்றி பெற்று கோப்பை வென்றது. பத்து முறை தோல்வி அடைந்து 2ஆவது இடம் பிடித்தது.

இத்தொடரில் அதிக கோல் அடித்தவர்களுக்கான பட்டியலில் பார்சிலோனா அணியின் நெய்மர், செவில்லா அணியின் இயகோ அஸ்பாஸ் முதலிடத்தை பகிர்ந்து கொண்டனர். இவர்கள் இருவரும் தலா 7 கோல் அடித்தனர். பார்சிலோனாவின் மெஸ்சி 5 கோல்களுடன் 3ஆவது இடத்தைப்பகிர்ந்து கொண்டார்.

## மன்னிப்பேன்; மறக்கமாட்டேன்



(ஜுரிச்)

கால்பந்து அமைப்புக்கு எதிராக அமெரிக்க நீதித்துறை செயற்பட்ட விதம் அதிர்ச்சியாக உள்ளது. ஐரோப்பிய கால்பந்து சங்கத் தலைவர்களும் எனக்கு எதிராகச் செயற்பட்டனர். இவர்களை மன்னித்து விடுவேன். ஆனால் மறக்க மாட்டேன் என, பிபா தலைவர் செப் பிளாட்டர் தெரிவித்தார்.

சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) சுவிட்சர்லாந்து தலைநகர் ஜூரிச்சில் உள்ளது. இதன் தலைவர் தேர்தலில், சுவிட்சர்லாந்தின் செப் பிளாட்டர், (வயது- 79), ஐந்தாவது முறையாக வெற்றி பெற்றார்.

இதுகுறித்து செப் பிளாட்டர் கூறியதாவது, பிபா தேர்தல் நடைபெறவிருந்த சில நாட்களுக்கு முன், அமெரிக்க ஊழல் தடுப்பு பிரிவு கொடுத்த உத்தரவு அடிப் படையில், துணைத்தலைவர் உட்பட 7 பேரை கைது செய்தனர். இது தற்செயலான நடவடிக்கை அல்ல, பிபா நிர்வாகத்துக்கு எதிராக வேண்டுமென்றே இப்படிச் செய்துள்ளனர். ஏனெனில், 2022 உலக கோப்பை தொடரை நடாத்தும் வாய்ப்பை, அமெரிக்கா இழந்துள்ளது. இதனால் தான், அமெரிக்கா இப்படி நடந்து கொண்டுள்ளது என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பிபா குறித்து அமெரிக்க நீதித்துறை, அட்டர்னி ஜெனரல் லொரெட்டா லின்ச் கூறுகையில், கால்பந்தில் பரவலாக ஊழல் மலிந்து கிடக்கிறது, என்கிறார். மற்றொருவர் பிராட் உலக கோப்பை என்கிறார். உண்மையில் இது அதிர்ச்சி தருகிறது. என்ன நடக்கின்றது, எது உண்மை என்று தெரியாமல், மற்றொரு நிர்வாகம் குறித்து இப்படி ஒருபோதும் நான் பேசியது கிடையாது.

ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பு தலைவர் பிளாட்டினி மட்டுமல்ல பலரும் என்னை பதவி விலக வேண்டும் என்கின்றனர். இது வெறுக்கத்தக்க செயல். இதை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. இவர்களை மன்னித்து விடுவேன். ஆனால் எப்போதும் மறக்க மாட்டேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கனிஷ்ட உலகக் கிண்ண கால்பந்து; அமெரிக்காவுக்கு முதல் வெற்றி

(ஒக்லாந்து)

கனிஷ்ட உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டியில் முதல் நாள் ஆட்டத்தில் அமெரிக்க அணி வெற்றிபெற்றது. ஏனைய மூன்று போட்டிகளும் சமநிலையில் நிறைவடைந்துள்ளன.

கனிஷ்ட உலக கோப்பை கால்பந்து போட்டி (20 வயதுக்குட்பட்டோர்) இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடாத்தப்படுகிறது. இதன்படி 20ஆவது கனிஷ்ட உலக கோப்பை கால்பந்து போட்டி நியூசிலாந்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இந்தப்போட்டியை நியூசிலாந்து நடாத்துவது இதுவே முதல் முறையாகும். அங்குள்ள 7 நகரங்களில் இந்த போட்டி நடைபெற்று வருகின்றது.

இதில் பங்கேற்றுள்ள 24 அணிகள் 6 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகளும், 3ஆவது இடத்தை பிடிக்கும் அணிகளில் சிறந்த நிலையில் உள்ள முதல் 4 அணிகளும் என்று மொத்தம் 16 அணிகள் 2ஆவது சுற்றுக்கு தகுதி பெறும்.

ஆரம்ப நாளான நேற்று முன்தினம் 4 லீக் ஆட்டங்கள் நடந்தன. ஏ பிரிவில் அங்கம் வகிக்கும் போட்டியை நடாத்தும் நியூசிலாந்து அணி, உக்ரைனை ஒக்லாந்து நகரில் எதிர்கொண்டது. குழுமியிருந்த 25 ஆயிரம் இரசிகர்களுக்கு மத்தியில் களம் இறங்கிய உள்ளூர் அணியான நியூசிலாந்தால் கடைசி வரை ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. முடிவில் ஆட்டம் கோல் இன்றி சமநிலையில் முடிந்தது.

இதே பிரிவில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் அமெரிக்கா 2-1 என்ற கோல் கணக்கில் அறிமுக அணியான மியன்மாரைத் தோற்கடித்தது. அமெரிக்க அணியில் மகி டொல் (17ஆவது நிமிடம்), மெர்சன் ஹைன்ட்மான் (56ஆவது நிமிடம்) ஆகியோர் கோல் அடித்தனர்.

பி பிரிவில் நடைபெற்ற ஆர்ஜென்டினா-பனாமா இடையிலான ஆட்டம் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையானது. ஒரு கட்டத்தில் ஏஞ்சல் கோரி அடித்த இரட்டை கோலால் 6 முறை சம்பியனான ஆர்ஜென்டினா 83ஆவது நிமிடம் வரை 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது. அதன் பின் பனாமா வீரர் பிடெல் எஸ்கோபார் கோல் போட்டு சமநிலைக்குக் கொண்டு வந்தார்.

இதே பிரிவில் நடைபெற்ற கானா-ஆஸ்திரியா இடையில்ான மற்றொரு ஆட்டமும் (1-1 கோல்) யாருக்கும் வெற்றி- தோல்வியின்றி சமநிலையில் முடிந்தது. முன்னாள் சம்பியன் கானாவுக்கு கடைசி நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பில் யா யபோவ் கோல் அடித்ததால் அதிர்ச்சித் தோல்வியில் இருந்து தப்பியது.



## சந்தர்போல் கோரிக்கை நிராகரிப்பு

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் தன்னை அணியில் சேர்க்குமாறு கோரிய அனுபவம் வாய்ந்த சந்தர்போல் கோரிக்கை மே.தீவுகளின் கிரிக்கெட் சபையால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னணி வீரர் சந்தர்போல். அவர் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடரில் பங்கேற்கும் மே.தீவுகள் பயிற்சி அணியில் சேர்க்கப்படவில்லை.



அவரை ஓரம் கட்ட கிரிக்கெட் சபை முடிவு செய்து இந்த நடவடிக்கை எடுத்தது. தன்னை ஓய்வு பெறும்படி கட்டாயப்படுத்தக்கூடாது. அவுஸ்ரேலிய தொடருக்கு தன்னை தேர்வு செய்யும்படி சந்தர்போல் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த நிலையில் முதல் டெஸ்ட் போட்டிக்கான 14 பேர் கொண்ட மே.தீவுகள் அணி அறிவிக்கப்பட்டது. இதில் சந்தர்போல் இடம் பெறவில்லை. அவர் நீக்கப்பட்டுள்ளார். 2 புதுமுக வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சந்தர்போல் வெறும் 92 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முன்னணிகள் முன்னேற்றம்; 4ஆவது சுற்றுக்கு

(பரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் நான்காவது சுற்றுக்கு செரீனா வில்லியம்ஸ் மற்றும் நடால், ஜோகோவிச் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் பிரான்ஸின் பரிஸில் நடைபெற்று வருகின்றது. இப்போட்டித் தொடரின் 7ஆம் நாளான நேற்று முன்தினம் 3ஆவது சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன..


பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதல்நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) அசெரன்கா (பெலாரஸ்) மோதினர். இதில் முதல் செட்டை செரீனா 3-6 என்ற கணக்கில் இழந்தார். பின் சுதாகரித்துக்கொண்ட அவர் மற்ற இரண்டு செட்களையும் 6-4, 6-2 என்ற கணக்கில் கைப்பற்றி 4ஆவது சுற்றுக்குள் நுழைந்தார்.

அமெரிக்காவின் ஸ்டெப்னஸ் 6-4, 6-1 என்ற நேர்செட் கணக்கில் பிரான்கோவாவை (பல்கேரியா) வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.


ஆண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ஸ்பெயினின் டேவிட் பெரர்-போல்லி (இத்தாலி) மோதினர். இதில் பெரர் 6-3, 1-6, 5-7, 6-0, 6-4 என்ற செட் கணக்கில் வென்று 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

நடப்பு சம்பியன் ஸ்பெயினின் ரபெல் நடால், ரஷ்யாவின் ஆண்ட்ரி குஸ்னட்சோவுடன் மோதினார். தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய நடால் 6-1, 6-3, 6-2 என்ற நேர் செட்டில் குஸ்னட்சோவை பந்தாடினார். நடால் 4ஆவது சுற்றில் அமெரிக்காவின் ஜாக் சோக்கை சந்திக்கிறார். இவர்கள் இருவரும் நேருக்கு நேர் சந்திக்க இருப்பது இதுவே முதல் முறையாகும்.


சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், அவுஸ்ரேலியாவின் கோக்கினாகிசை எதிர்கொண்டார். இதில் அனுபவம் வாய்ந்த ஜோகோவிச் 6-4, 6-4, 6-4 என்ற நேர் செட்டில் 19 வயதான கோக்கினாகிசை வீழ்த்தினார்.







# நீலங்களின் போர்; கிளி. இந்து பெரு வெற்றி



(கிளிநொச்சி)

நீலங்களின் போர் என வர்ணிக்கப்படும் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி பத்து விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் மற்றும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையில் நடைபெறும் நீலங்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி கடந்த 29, 30ஆம் திகதிகளில் கிளிநொச்சி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எந்தவொரு வீரரும் அணியின் நிலையை உணர்ந்து செயற்படவில்லை. பந்து வீச்சில் பார்த்தீபன் மூன்று, கோபிசாந்த் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஏ. அனுக்ஷன் 30 ஓட்டங்களைப் பெற்றார். ஏனையோர் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் மருதன் மூன்று, பிரதீப் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

43 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணி அனுக்ஷன், பார்த்தீபன் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக 21.2 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 45 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அனைத்து வீரர்களும் சோடைபோனார்கள். பந்து வீச்சில் பார்த்தீபன், அனுக்ஷன் ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு மூன்று ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இரண்டாவது இனிங்ஸிற்காக கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதன் மூலம் வடக்கின் நீலங்களின் போரில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி பத்து விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது. இப்போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராக இரு இனிங்ஸிலும் ஏழு விக்கெட்டுக்களைச் சாய்த்த பார்த்தீபன், சிறந்த துடுப்பாட்ட வீரராக ஏ. அனுக்ஷன், சிறந்த களத்தடுப்பாளராக கே. கஜனன், போட்டியின் ஆட்டநாயகனாக அனுக்ஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே. முருகவேல், யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர். நிசாந்தன், ஏயர்டெல் நிறுவனத்தின் வடமாகாண வியாபார முகாமையாளர் றோய் பிரதீபன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு விருதுகளை வழங்கி கௌரவித்தனர். இப்போட்டிக்கு முழு அனுசரணையையும் ஏயர்டெல் நிறுவனம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (160)

## விளையாட்டுச் செய்திகள்

# மதுஷன் ஜொலிப்பு; யாழ். மத்தி பெருவெற்றி



மதுஷனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 87 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி தற்போது நாடு தழுவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது. இதில் யாழ். மத்திய கல்லூரி மற்றும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி கடந்த 28ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி மதுஷனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. ஒரு முனையில் விக்கெட் சீரான இடைவெளியில் வீழ்த்தப்பட்டபோதிலும் மதுஷன் சளைக்காது போராடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார்.மதுஷனுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் நிதர்சனும் பொறுப்புடன் ஆடினார். இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 42 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ். மதுஷன் 90 பந்துகளை எதிர்கொண்டு பத்து பவுண்டரிக்கள் அடங்கலாக 69, எஸ். நிதர்சன் 76 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் றிசாத் 30 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, தனுசன் 8 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 168 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி மதுஷனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஜன்சன் நிதானமாக ஆடி தோல்வியைத் தவிர்க்கப் போராடியபோதிலும் ஏனைய வீரர்கள் விரைவாக களத்தைவிட்டு வெளியேறியதால் மகாஜனக் கல்லூரியின் தோல்வி உறுதியானது. நிறைவில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி 31.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஜன்சன் 29, கிருசன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எஸ். மதுஷன் 14 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு, இயலரசன் 22 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். துடுப்பாட்டம், பந்து வீச்சு என இரு துறைகளிலும் கலக்கிய எஸ். மதுஷன் மத்திய கல்லூரியின் வெற்றிக்கு பெரும் துணைபுரிந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் சுன்னாம் ஸ்கந்தவரோதயா, யாழ். மத்திய கல்லூரி அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாவட்ட கரப்பந்து; மகுடம் சூடியது தெல்லிப்பளை செயலம்

### கோப்பாயின் தொடர் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி



யாழ். மாவட்ட பிரதேச செயலக பிரிவு அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் கடந்த 18 வருடங்கள் தொடர்ச்சியாக ஆதிக்கம் செலுத்திய வந்த கோப்பாய் பிரதேச செயலக அணிக்கு நடப்பு ஆண்டில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி முற்றுப்புள்ளி வைத்து சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன. கடந்த 18 வருடங்களாக மாவட்ட சம்பியன் மகுடத்தை சூடிய கோப்பாய் பிரதேச செயலக அணி 19ஆவது முறையாகவும் சம்பியன் பட்டத்தை வெல்லும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்ற வெறியுடன் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி களமிறங்கியது. ஐந்து செட்களைக் கொண்ட இப்போட்டியில் முதல் செட்டில் இரு அணிகளும் சமபலத்துடன் முட்டி மோதிக் கொண்டதால் இழுபறி நிலையில் 27-25 என்ற புள்ளிகள் அடிப்படையில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி கைப்பற்றிக்கொண்டது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் செயற்பட்ட கோப்பாய் பிரதேச செயலக அணி இரண்டாவது செட்டை 25-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சமன் செய்தது. மூன்றாவது செட்டில் மீண்டும் எழுச்சி பெற்ற தெல்லிப்பளை பிரதேச செயலக அணி 25-19 என்ற புள்ளிகளைப் பெற்று முன்னிலை பெற்றது. நான்காவது செட்டில் சுதாகரித்து செயற்பட்ட கோப்பாய் பிரதேச செயலக அணி 25-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று மீண்டும் போட்டியை சமன் செய்தது. வெற்றி-தோல்வியைத் தீர்மானிக்கும் இறுதி செட்டில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றபோதிலும் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி 22-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று வரலாற்றுச் சாதனை படைத்தது. இறுதியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று மாவட்ட சம்பியன் பட்டத்தை கைப்பற்றிக் கொண்டது. கடந்த 18 வருடங்களாக மாவட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் ஆதிக்கம் செலுத்தி வந்த கோப்பாய் பிரதேச செயலக அணியின் நடப்புத்தொடரில் பெரும் ஏமாற்றத்துடன் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.


தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும் கரவெட்டி பிரதேச செயலக அணியும் மோதின. இதில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று ஒன்பதாவது முறையாக மாவட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)






# நிகழ்வுகளின் பதிவுகள்....


போரினால் தாய் தந்தை இருவரையும் இழந்து வவுனியா டொன்பொஸ்கோ சிறுவர் இல்லத்தின் பராமரிப்பில் இருந்துவரும் 75 மாணவிகளுக்கு லண்டன் நம்பிக்கை ஒளி ஊடாக கணனி, உடுபுடைவைகள் மற்றும் இதர பராமரிப்பு பொருட்களை வழங்குவதைக் காணலாம்.





வவுனியா நொச்சிக்குளம் இல.01 கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தின் பெற்றோர் தின விழா நேற்று முன்தினம் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் க.ஜெயகுமார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றபோது...





இந்துக்களின் குரல் இந்துத் தேசிய மாத இதழின் அறிமுக விழா அண்மையில் சாவ கச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றபோது விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப் பதையும் விழாவில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் காணலாம். (06)





நோர்வே மற்றும் இலங்கை இசைமன்றம் இணைந்து யாழில் 3ஆவது தடவையாக வழங்கிய சர்வதேச இசை நிகழ்வு சேவா லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றதைக் காணலாம். (25,105)





வலி. மேற்கு பிரதேசத்திற்கு அண்மையில் விஜயம் செய்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்ற கழகத்திற்கு விஜயம் மேற்கொண்டு வீதி மின் விளக்குகளை அன்பளிப்பாக வழங்குவதைக் காணலாம்.

# வடக்கின் இன்றைய விவசாய சேவை

# கழுதைதேய்ந்து கட்டெறும்பாகும் நிலையில்

## உற்சாகமூட்டும் அறிகுறி எதுவும் இல்லை



இலங்கையின் விவசாயத் துறையில் வடக்கின் பங்களிப்பு ஆனது எழுபதுகளிற்கு முன்னர் மிகவும் ஓர் உயர்நிலையில் இருநதது என்பது எமது நாட்டின் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் விடயமாகும். விவசாயிகளின் கடின உழைப்பும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளின் அறிவாற்றலும் அனுசரணையும் வடக்கின் விவசாயத்தை ஓர் உயர் இடத்தில் நிலைபேறு அடையச் செய்திருந்தது. பின்னர் நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக இது நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் இன்று பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. வடபகுதியின் ஏனைய் துறைகளும் இவ்வாறாகத்தான் உள்ளன. இக்குறைபாடுகள் சம்பந்தப்பட்ட தரப்பினரால் நிவர்த்திக்கப்பட வேண்டியது கட்டாயமானதாகும் என்று விவசாயசேவைக்கு தகுதியுடைய தமிழ்மொழி மூல உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

வடபகுதிக்கான விவசாய சேவையினை திறம்படச் செய்வதற்காக ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஓர் உதவி விவசாயப் பணிப்பாளரும் (தற்போது பிரதி விவசாயப் பணிப்பாளர்) இரண்டு விவசாய உத்தியோகத்தர்களும் (தற்போது உதவி விவசாயப் பணிப்பாளர்) கடமையாற்றினார்கள். கிளிநொச்சியில் சேவைக்காலப் பயிற்சி நிலையம் திறம்படச் செயற்பட்டது. கிளிநொச்சி, திருநெல்வேலி போன்ற இடங்களின் ஆராய்ச்சி நிலையங்களும் அவற்றின் பிரிவுகள் மாவட்டங்கள் தோறும் திறம்படச் செயற்பட்டன.

வடமாகாணத்தில் இன்று இவ்வாறான நிலைமைகள் இல்லை. மாவட்டங்கள்தோறும் பிரதி விவசாயப் பணிப்பாளர்கள் மட்டுமே உள்ளனர். அவர்களின் பொறுப்புக்களை பங்கேற்கும் உதவி விவசாயப் பணிப்பாளர்கள் எந்தவொரு மாவட்டத்திலும் இல்லை. அவர்களிலும் சிலர் விரைவில் ஓய்வுபெற உள்ளவர்கள். சேவைக்காலப் பயிற்சி நிலையம் முற்றிலும் இயங்காத நிலையில் உள்ளது. நாட்டின் ஏனைய மாகாணங்கள் தோறும் இவை சிறப்பாகத் தொழிற்படுகின்றன. தமிழ் மொழிமூலம் விவசாய டிப்ளோமா பாடநெறியை வழங்கும் விவசாயக் கல்லூரிகளில் குண்டசாலை விவசாயக் கல்லூரி ஒன்பதிற்கும் மேற்பட்ட நிரந்தர தமிழ் மொழிமூல விரிவுரையாளர்களுடன் இயங்க வேண்டிய நிலையில் எந்தவொரு நிரந்தர விரிவுரையாளர்களும் இன்றி முற்றிலும் தற்காலிக விரிவுரையாளர்களின் பங்களிப்பில் இயங்குகிறது. வவுனியா விவசாயக் கல்லூரி பதினொரு விரிவுரையாளர்களுடன் இயங்க வேண்டிய நிலையில் மூன்று நிரந்தர விரிவுரையாளர்களுடனும் மிகுதி தற்காலிக விரிவுரையாளர்களுடனும் இயங்குகிறது. இவ்விவசாயக் கல்லூரிகளே தமிழ் மொழிமூல விவசாயப் போதனாசிரியர்கள், விவசாய ஆராய்ச்சி உதவியாளர்கள், குடியேற்ற உத்தியோகத்தர்கள் போன்றோரை உருவாக்குகின்ற நிறுவனங்களாகும். மேலும் விவசாய இயந்திரங்கள் சம்பந்தமான பயிற்சியை வழங்கவென்று தேசியரீதியில் ஒரேயொரு நிறுவனம் அனுராதபுரத்தில் உள்ளது. இங்கு பயிற்சியினை தமிழ் மொழியில் வழங்குவதற்கு எந்தவொரு தமிழ் மொழி பேசும் உத்தியோகத்தர்களும் இல்லை. இங்கு மொழிபெயர்ப்பு மூலம் பெறப்படும் பயிற்சியானது வினைத்திறனான கற்றலுக்கு பாதிப்பான விடயமாகும்.

இவ்வாறான பின்னணியில் கடந்த 18. 04. 2015 இல் விவசாயக் கல்லூரி மாணவர்கள், பெறோர்கள், விவசாயத் திணைகள உத்தியோகத்தர்கள் வட மாகாண விவசாய அமைச்சரைச் சந்தித்து தங்களுடைய பிரச்சினைகளை வேண்டுகோள்களாகக் கையளித்திருந்தனர். அதன் தொடர்ச்சியாக மாணவர்களின் அறிக்கைகள் பல ஊடகங்களிலும் வெளிவந்தவண்ணமுள்ளன. அந்த வகையில் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களாகிய நாம் இவ்விடயத்தினை மீண்டும் ஊடகங்கள் வாயிலாக சம்பந்தப்பட்ட தரப்பினரின் க்வனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

# உயர்தர மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை





அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அபிவிருத்திச் சங்கத்தின் வவுனியா மாவட்ட ஏற்பாட்டில் இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை கடந்த மாதம் பதினெட்டாம் திகதி ஆரம்பித்து வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மற்றும் கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் நடைபெற்று முடிந்தது

மாணவர் நலன் கருதி இப்பரீட்சைகள் இலவசமாகவே நடாத்தப்பட்டது வவுனியாவில் கணித, உயிரியல் மற்றும் வர்த்தகப் பிரிவு மாணவர்களும், மற்றைய மாவட்டங்களில் கணித மற்றும் உயிரியல் பிரிவு மாணவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்

அனைத்து மாணவர்களுக்குமான புள்ளித் திட்டமும் இலவசமாகவே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மாணவர்களின் கல்வி நடவடிக்கையின் முன்னேற்றத்திற்காக பல்வேறு வழிகளில் உதவி புரியும் இச்சங்கமானது, இப்பரீட்சை மூலமாக சிறந்த வழிகாட்டல் ஒன்றினையும், பொதுப் பரீட்சைக்கான முன்னோடியாகவும் இப்பரீட்சை அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# கசிப்பு உற்பத்தி காரைநகரில் ஒருவர் கைது

காரைநகர் ஐயனார் கோவிலடிப்பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடமொன்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் கசிப்பு உள்ளிட்டவையும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். நீண்டநாட்களாக குறித்த பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுகின்றது என வட்டுக்கோட்டை மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட போதும் எதுவித நடவடிக்கையினையும் பொலிஸார் மேற்கொள்ளவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இதனையடுத்து இன்றையதினம் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் அப் பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்ததுடன் 250 லீற்றர் கசிப்பு பரல் 04 , 30 லீற்றர் கசிப்பு 2 பரல், மற்றும் கசிப்பு உற்பத்தி செய்வதற்கு தேவையான உபகரணங்களும் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற் கொண்டுவருகின்றனர்.

# சமகாலத்தில் இந்து சமய நிலை; யாழில் ஆராய்வுக் கூட்டம்

யாழ். மாவட்டத்தில் இந்து சமயத்தின் சமகால நிலைமை தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டமொன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், இந்து கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் உமாமகேஸ்வரன், யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன், இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரதேச செயலர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், சின்மயா மிசன், இராமகிருஸ்ண மிசன் போன்றவற்றின் பிரதிநிதிகள் போன்ற பலர் கலந்துகொண்டனர்.

இங்கு, அறநெறிக் கல்வியை வலுவூட்டல், ஆலயங்களை மையமாகக் கொண்டு சமுதாயப் பணிகளை முன்னெடுத்தல், ஆலயங்களில் மிருக பலியை முற்றாக நிறுத்துதல், ஆலயங்களில் உள்ள பிணக்குகளுக்கு தீர்வு காணுதல், சமய நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைவை ஏற்படுத்தல், புதிய அறநெறி வகுப்புக்களை உருவாக்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

ஆலயங்களில் மிருக பலியை நிறுத்துமாறு கோரி சைவ மகா சபையின் ஏற்பாட்டில் யாழ். குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான கையொப்பங்கள் அடங்கிய மகஜரை சைவ மகா சபையின் சார்பில் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் இந்து கலாசாரப் பணிப்பாளரிடம் கையளித்தார்.


இதன்போது, மிருக பலியிடலை முற்றாக நிறுத்து வதற்கான விசேட சட்டமூலம் ஒன்று விரைவில் இந்து கலாசார அமைச்சினால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக இந்து சமய கலாசாரப் பணிப்பாளர் தெரிவித்தார். அத் துடன் வெள்ளிக் கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களை மூடி மாணவர்களை அறநெறி வகுப்புக்களுக்கு அனுப்புவதற்குரிய ஒழுங்குகளை தான் மேற்கொள்வதாக யாழ். அரச அதிபர் உறுதியளித்தார்.

# புதிய நிர்வாகம் தெரிவு

பொலிகண்டி கிழக்கு கடற் றொழிலாளர் கூட்டுறவு சங்க புதிய நிர்வாகம் கடந்த 21.05.2015 அன்று பழைய நிர்வாகத் தலைவர் தலைமையில் கிராம மக்கள் முன்னிலையில் நடைபெற்றது. அதன்படி புதிய நிர்வாகம் மற்றும் சபை உறுப்பினர்கள் தெரிவு நடைபெற்றது.

தலைவர் மு.ரகுநாதன் உப தலைவர் மே.அமல்ராஜ் செயலாளர் சி.சிவகுமாரன் உப செயலாளர் அ.லிங்கேஸ்வரன் பொருளாளர் யே.அன்ரன் மரியதாஸ் சபை உறுப்பினர்கள் ப.சிவநேஸ்வரராசா பு.ஜெயராணி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.





நெல்லியடி புதிய பேருந்து தரிப்பிடம் தவிசாளர் வியாகேசு தலைமையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டதைக்காணலாம்.

# யாழ். ஊடகவியலாளர் விடுதலை
# குற்றச்சாட்டு நிருபிக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பிராந்திய பத்திரிகை ஒன்றில் பிரசுரமான செய்தி தொடர்பில் விசாரணைக் குட்பட்டிருந்த ஊடகவியலாளர் ஒருவர், விடுதலை செய்யப்பட்டார்.

போதுமான குற்றச்சாட்டுக்கள் அவருக்கு எதிராக இல்லை என்றும், செய்தி ஒன்றுக்காக ஊடகவியலாளர் ஒருவரை கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு உண்டா? இல்லையா? என்பது தொடர்பில் கேள்வி எழுவதாகவும் தெரிவித்து பருத்தித்துறை நீதவான் மா.கணேசராஜா அவரை விடுதலை செய்தார்.

எவ்வாறாயினும் ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படும் பத்திரிகை ஒன்று தனது செய்திகளைப் பிரசுரிக்கின்ற பொழுது அவற்றின் உண்மைத் தன்மையை தீர ஆராய்ந்து பொறுப்புடன் பிரசுரிக்க வேண்டும் என்றும் தமது தீர்ப்பில் வலியுறுத்தியுள்ளார்.

நீதவான் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளதாவது,

சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள், ஆவணங்களை உற்று நோக்குகின்ற பொழுது குற்றம் என்ன என்பது குறித்து மன்றில் அறிக்கை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

குற்றச்சாட்டு தொடர்பில் விளக்கம் அல்லது அறிக்கை தாக்கல் செய்வதற்கு போதுமான கால அவகாசத்தை மன்று பொலிஸாருக்கு வழங்கியிருந்தது.

இந்த வழக்கில் எந்தவிதமான குற்றச்சாட்டும் மன்றில் குறித்த ஊடகவியலாளருக்கு எதிராக முன்வைக்கப்படாத நிலையிலும் மேலும் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் பிரிவுகள் உரிய முறையில் பின்பற்றப்படாத நிலையிலும் இவ்வழக்கில் இவ் ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டிருப்பது சட்டத்திற்கு விரோதமானதென்று மன்று தீர்மானிக்கின்றது.

மேலும் செய்தி ஒன்றுக்காக ஊடகவியலாளரை கைது செய்வதற்கான அதிகாரம் பொலிஸாருக்கு உள்ளதா? இல்லையா? என்பது தொடர்பில் கேள்வியெழுகின்றது.

ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டு இருப்பதானது உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்ட வரையறைகளை மீறுவதாகவே மன்று கருதுகின்றது.

மேலும் இவ்வாறான கைதுகள் சட்ட ஆட்சியை கேள்விக்குட்படுத்தும் என்ற காரணத்தினாலும் குறித்த எதிரிக்கெதிராக குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படாத காரணத்தினாலும் மன்று எதிரியை விடுதலை செய்கின்றது.

# பாடசாலைகள் தோறும் முறைப்பாட்டுப் பெட்டி


சகல பாடசாலைகளிலும் முறைப்பாட்டுப் பெட்டியொன்று வைக்கப்படல் வேண்டும். இதில் விழும் முறைப்பாடுகள் அதிபர், பிரதேச பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொறுப்பான பெற்றோர்கள் ஆகியோர் முன்னிலையில் பிரித்துப் பார்க்கப்படல் வேண்டும். மாணவர்கள் மீதான துஷ்பிரயோகங்களை குறைப்பதற்கு, இதுவே சிறந்த வழிமுறை என கல்வி இராஜாங்க அமைச்சர் வீஇராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

வடக்கு பாடசாலைகளில் மாணவர்கள் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், இதனைக் கட்டுப்படுத்த பெற்றோர் உட்பட பொறுப்பானவர்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கடந்த யுத்த காலத்திலும் இதுபோன்ற துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன. இதற்கு எல்.ரி.ரி.ஈ. யினர் இராணுவத்திற்கும், இராணுவத்தினர் எல்ரி.ரி.ஈ.யிற்கும் குற்றம் சுமத்தி வந்துள்ளனர்.

இருப்பினும், நல்லாட்சியில் இதுபோன்ற ஒரு நிலைமை இருப்பதாயின் அதனைப் பார்த்திருக்க முடியாது. யுத்தம் இல்லாத காலத்தில் தமிழ்ச் சமூகத்திலுள்ள மாணவர்கள் அச்சமூகத்தவர்களாலேயே துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர் எனவும் அமைச்சர் பி.பி.சி. சேவையிடம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வீதி அபிவிருத்தியின் பெயரால் அரங்கேறிய நிதி மோசடி
## – ரணில் சீற்றம் –



(கொழும்பு)

அரசாங்கத்தில் வீதி அபிவிருத்திநடவடிக்கைகளுக்கென அரச வங்கியொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட 55000 மில்லியன் ரூபா நிதியில். 28000 மில்லியன் ரூபா வேறு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கண்டி பண்வில பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் போது அரச வங்கியொன்றிலிருந்து வீதி அபிவிருத்தி பணிகளுக்கென 55000 மில்லியன் ரூபா நிதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அதில் 28000 மில்லியன் ரூபா அன்னதானம் கொடுத்தல் உள்ளிட்ட வேறு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை என்னவென்று கூறுவது. திருட்டு என்று கூறமுடியாதா. இந்நிலையில் இது தொடர்பாக விசாரணை நடத்துவது அரசியல் பழிவாங்கல் என்கின்றனர். என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பள்ளிவாசல் மீது கல்வீச்சு நல்லாட்சியிலும் வன்முறை

(பொரளை)

பொரளையில் அமைந்துள்ள ஜாமியுல் அல்பார் ஜும்ஆப் பள்ளிவாசல் மீது நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத கும்பல் ஒன்று கல் வீச்சுத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.


குறித்த தாக்குதலில் பள்ளிவாசலின் கண்ணாடிகளுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

பள்ளிவாசல் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தத முச்சக்கர வண்டி ஒன்றில் இருந்த சில பொருட்கள் காணாமற் போயுள்ளதாகற் கூறி, அந்த முச்சக்கர வண்டி சாரதி உட்பட குழுவினர் பள்ளிவாசல் நிருவாகத்திடம் CCTV கமராவின் ஒளிப்பதிவுகளை காண்பிக்குமாறு கேட்டுள்ளனர்.

என்றாலும் பள்ளிவாசலின் CCTV கமரா செயலிழந்து காணப்பட்டமையினால், பள்ளிவாசல் நிர்வாக சபை அவர்களிடம் கமராக்கள் வேலை செய்வதில்லை என அறிவித்துள்ளனர்.

# பரமர் சங்கமம்



'சேத்தில் தான் செந்தாமரையும் விளைகிற' தெண்டும் 'அமுதமும் நஞ்சுங்கூட நாம் பிறந்த மண்ணில் விளைவதும் புதிய சங்கதியள் இல்லைத் தான் கூட்டு வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ள வித்தியாவின் பாடுகளும், பின்னணிகளும் வேறெந்த சம்பவங்கலும் வெளிவராத அளவுக்குப் பல்வேறுபட்ட கோணங்களில் வெளியாகிக் கொண்டிருந்ததைக் கவனிக்கலாம்.

கொழும்பால் 13ஆம் திகதி காலையிலே புங்குடுதீவு வந்து சேர்ந்த மூவர் அந்நேரம் ஒரு ஒதுக்குப்புறத்தில் மது அருந்திக் கொண்டிருந்ததும் , பாடசாலைக்கு சைக்கிளில் மாணவி செல்கையில் மழை பெய்ய அவள் அந்த ஒதுக்குப்புறத்தில் ஒதுங் குவதும் வினையாக அமைஞ்சிட்டுது.

புங்குடுதீவுப் பகுதியில் யுத்தச்சூழல் 1995, பாரிய இடம் பெயர்வுகளுக்குப் பின்பாகத் தெட்டம் தெட்டமாக பல வீடுகள் குடியிருப்பில்லாமல் கைவிடப்பட்டுள்ள நிலை மேலை இவ்விதம் தனிமையில் அகப்படும் புள்ளிமான்கள் வேட்டையாடப்படுவதும் அநேகமானவை மறைக்கப்படவும் மறைஞ்சு போகவும் ஒன்றிரண்டு இப்படி வெளியாகியும் விடுகின்றன

கடந்த சிவராத்திரி தினத்துக்கு புளியங்குளம் மாணவியும் திருக்கேதீஸ்வரம் போய் வந்து மரணித்ததும் கூட்டு வன்முறையாலெண்ட செய்தியள் வந்து போச்சு ஆனா அதுகள் விலாவாரியாக வெளிவரவில்லை வித்தியாவின் சம்பவத்தில் சுவிஸ்பிரசை ஒருவர் கொழும்பு சென்று கொண்டிருக்கையில் அழைப்பு வந்ததாகவும், அவரும் திரும்பி வந்து கலந்து விட்டுப் போனதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

அதுபோலக் கொழும்பு திரும்பிய அவருக்கு மரணித்த தகவல் கிடைத்து புங்குடுதீவு திரும்பியவர் செத்த வீட்டுச் செலவுகளைப் பார்த்ததும், ஏனைய ஒன்பது குற்றவாளிகளும் நின்றே மரணச்சடங்கை நிறைவேற்றி முடித்ததும் கூடப் புதுமையாகவே அமைஞ்சிட்டுது.


அது மட்டுமில்லாமல் குற்றவாளிகளில் ஒருவரைக் களட்ட சொந்த ஊருக்குத் திரும்பிய சட்டத்தரணியும், அரசியல் கட்சிப்பிரமுகரும் மக்களால் சிறை வைக்கப்பட்டதும், கொடும்பாவிகள் எரிக்கப்பட்டதும் புதிச சங்கதியளாக இருக்க இத்தனையும் அந்தப் பிரமுகர் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பாகச் செய்த பாவச்செயலுக்கான காலம் கடந்த தண்டனை எண்டும் அரசல்புசரலாக் கதை ஒண்டும் வெளிவந்து கொண்டிருக்கெல்லே!

அக்காலத்தில் கொழும்பில் தங்கி படித்துக்கொண்டிருந்த இவருடன் மூத்த சகோதரனின் மகளொருவர் சிறிய தந்தை உறவோடு தங்கிப்படிக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்தச்சட்டத்தரணி சட்டம் ஒழுங்கை மீறி மகளைக் கர்ப்பிணி ஆக்கி விட்டார்.

அந்தப்புள்ளை களங்கப்பட்ட புள்ளையோடை வாழ விரும்பாமல் தற்கொலை செய்திருந்ததாகவும், இப்படி கண்ணீர்ப் புகைக்குண்டாக வீழ்ந்து வெடித்து தலையைச் சுத்தச் செய்துள்ளது. இது மட்டுமே பரீட்சைகளில் கூடுதல் புள்ளிகள் இட பல புள்ளிமான்கள் இவரது வலையில் சிக்குண்டதாகவும் பேசப்படுகிறது

வித்தியாவின் சம்பவம் முற்றிலும் வித்தியாசமான தகவல்களை இன்னமும் தரவிருக்கோ ஆர்கண்டது? மலிந்தால் சந்தைக்கு வருந்தானை சேத்திலை கால் வைச்சாத்தானே சோத்திலை கை வைக்கலாம் இல்லையே பின்னை....

# உலக சுற்றாடல் தினம் இந்தமுறை பொலநறுவையில்




(கொழும்பு)

உலக சுற்றாடல் தினம் 2015 தேசிய நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் எதிர்வரும் 5ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பொலநறுவை மெதிரி கிரிய வட்டதாகை புனித பூமியில் நடைபெறவுள்ளது. இம்முறை "முறையான பாவனை பூமியின் பாதுகாப்பு" என்ற தொனிப்பொருளில் உலக சுகாதார தினம் கொண்டாடப்படவுள்ளது.

சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சு மற்றும் சுற்றாடல் தொடர்பில் பணியாற்றும் நிறுவனங்களுடன் இணைந்து இந்த தேசிய நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்வில் 500 சூழல் செயற்பாட்டாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இத்தேசிய நிகழ்வை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபை இன்று தொடக்கம் நாளைமறுதினம் [illegible] வரை பொலறுவை மாவட்டத்தில் சுற்றாடல்சார் நிகழ்வுகள் பலவற்றை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்வுகள் 67 பாடசாலைளுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் மரநடுகை செயற்பாடுகள் மூலிகைச் செடிகள் நடல் வன உற்பத்தி கழிவு முகாமைத்துவம் என்பன உள்ளடங்குகின்றன. இச் செயற்பாடுகளுக்கான ஒரு பாடசாலைக்கு 5000.00 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது என மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தரம் - 3 பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I

1 மணி 15 நிமி

# கல்வி முரசு



(01) மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

01. காது மூலம் தகவலை அறியக்கூடிய சாதனம் எது?
  1) தொலைபேசி  2) பத்திரிகை  3) சஞ்சிகை

02. இன்றும் இலங்கையில் வெளிவரும் பத்திரிகை எது?
  1) ஈழநாடு  2) உதயதாரகை  3) வீரகேசரி

03. இலங்கையில் அதிகமாக நெல் விளையும் மாவட்டம் எது?
  1) அம்பாறை  2) கண்டி  3) குருநாகல்

04. நாம் வீட்டில் செய்யத்தக்க மாற்றம் அல்லாதது எது?
  1) பூஞ்செடிகளை வளர்த்தல்
  2) சூழலை சுத்தம் செய்தல்
  3) பெருவீதிகளை அமைத்தல்

05. செக்கில் எண்ணெய் பிழிய பயன்படுத்தப்பட்ட பிராணி எது?
  1) மாடு  2) கழுதை  3) குதிரை

06. கண்களாலும் காதாலும் தகவல்களைப் பெறக்கூடிய தகவல் தொடர்பு சாதனம் எது?
  1) வானொலி  2) தொலைக்காட்சி  3) சுவரொட்டி

07. பின்வருவனவற்றில் நிழல் தரும் மரம் எது?
  1) வாழை  2) முருங்கை  3) கத்தாப்பு

08. நாற்றுமேடைகளில் முளைக்க வைத்து கன்றுகளைப் பெறும் தாவரம் எது?
  1) கத்தரி  2) முருங்கை  3) கறிவேப்பிலை

09. காடழிக்கப்படுவதால் ஏற்படும் பாதிப்பு யாது?
  1) மழைவீழ்ச்சி குறைவடைதல்
  2) வெள்ளப்பெருக்கு ஏற்படுதல்
  3) சுனாமிப்பேரலை ஏற்படுதல்

10. கடும்பச்சைநிற இலை எது?
  1) பலா  2) வேம்பு  3) குருவிச்சை

11. பிளேக் நோயை பரப்பும் பிராணி எது?
  1) பூனை  2) நாய்  3) எலி


12. வித்து ஒன்று முளைக்க தேவையற்றது எது?
  1) நீர்  2) காற்று  3) மண்

13. தேசிய கொடியில் சுற்றி உள்ள மஞ்சள் நிறம் குறிப்பது
  1) தமிழர்கள்  2) தேசிய ஒற்றுமை  3) கருணையை

14. பத்திரிகையில் இறுதிப்பக்கத்தில் வரும் செய்தி யாது?
  1) உள்நாட்டு செய்தி
  2) விளையாட்டு செய்தி
  3) வெளிநாட்டு செய்தி

15. நுளம்பின் மூலம் பரவும் நோய் எது?
  1) டெங்கு  2) கொலரா  3) அம்மை

16. கூர்மையான பார்வையுடைய பறவை எது?

1)  2)  3) 



16. காற்றின் உதவியுடன் பயணம் செய்யும் போக்குவரத்துச் சாதனம் எது?
  1) புகையிரதம்  2) பாய்மரக்கப்பல்  3) பேருந்து


17. மழைபெய்யப் போவதை உணர்த்தும் பிராணியின் நடத்தை யாது?
  1) ஆண்மயில் தோகை விரித்தாடுதல்
  2) சேவல் கூவுதல்
  3) நரி ஊளையிடும்

18. இலங்கை மக்கள் அனைவராலும் கொண்டாடப்படும் விழா எது?
  1) தைப்பொங்கல்  2) சுதந்திரதினம்  3) சித்திரைப்புத்தாண்டு

19. 
இவ்விளையாட்டு
  1) கரப்பந்து  2) கபடி  3) காற்பந்து

20. வருடமொன்றின் ஐந்தாவது மாதம் எது?
  1) ஆடி  2) வைகாசி  3) சித்திரை


21. அருவி வெட்டப்பயன்படுத்தப்படும் உபகரணம் எது?

 2)  3) 

22. பண்டைய காலத்தில் பாரங்களை தூக்க பயன்படுத்தப்பட்ட பிராணி எது?
  1) யானை  2) குதிரை  3) மான்

23. நத்தையின் முட்டையின் நிறம் யாது?
  1) வெள்ளை  2) இளநீலம்  3) மஞ்சள்

24. இலங்கையின் தேசிய மலர் எது?

1)  2)  3) 

25. வித்துக்களை நடுவதன் மூலம் புதிய கன்றுகளை பெறக்கூடிய தாவரம் எது?
  1) மரவள்ளி  2) கறிவேப்பிலை  3) பூசணி

26. மிக விரைவாக முளைக்கக்கூடிய வித்து எது?
  1) கடுகு  2) புளி  3) பலா

27. பச்சை நிறமான வித்து எது?
  1) சாதிக்காய்  2) வேம்பு  3) பயறு

28. மா இடிப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம் எது?
  1) அம்மி  2) உரல்  3) செக்கு

29. உலகின் பெரும்பகுதி எதனால் மூடப்பட்டுள்ளது?
  1) நிலத்தினால்  2) நீரினால்  3) மலைகளால்

30. பூக்களை சேதப்படுத்தும் பிராணி எது?
  1) வண்ணத்துப்பூச்சி  2) தேனீ  3) வண்டு

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (01).1.1 | 2.2 | 3.3 | 4.1 | 5.2 | 6.3 | 7.2 |
| 8.2 | 9.2 | 10.3 | 11.3 | 12.1 | 13.3 | 14.1 |
| (02).15.3 | 16.3 | 17.1 | 18.2 | 19.3 | 20.2 | (03).21.சரி |
| 22.பிழை | 23.2 | 24.1 | 25.2 | 26.1 | 27.3 | 28.1 |
| 29.3 | 30.3 | 31.2 | 32.2 | (04).33.1 | 35.2 | 36.2 |
| 37.1 | 38.2 | | | | | |

இந்தப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்

17. இந்துக்களின் பண்டிகைகளில் ஒன்று எது?
1) பெரிய வெள்ளி 2) சித்திரைப்புத்தாண்டு 3) வெசாக்

18. பெரிய கல்லொன்றை புரட்டுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம்
1) அலவாங்கு 2) கவர் சுத்தியல் 3) பிக்கான்

19.  இவ்வுருவில் காட்டப்படும் பூ எது?
1) நீலோற்பலம்
2) சூரியகாந்தி
3) கொன்றை

20. குட்டியீன்று பால் கொடுக்கும் பிராணி எது?
1) வெளவால் 2) புறா 3) ஆந்தை

21. வானொலியை கண்டுபிடித்தவர் யார்?
1) அலெக்சாண்டர் கிரகம்பெல் 2) மார்க்கோனி 3) தோமஸ் அல்வா எடிசன்

22. கரையோர பிரதேசங்களில் வாழும் மக்களின் பிரதான தொழில் யாது?
1) தேயிலைக்கொழுந்து பறித்தல் 2) மீன் பிடித்தல் 3) விவசாயம்

23. நல்லெண்ணெய் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் வித்து எது?
1) எள் 2) வேம்பு 3) ஆமணக்கு

24 நல்வாழ்வு வாழ்வதற்கு நாம் செய்ய வேண்டியது
1) சண்டைபிடித்தல் 2) கோபம் கொள்ளல் 3) பொறுமைகொள்ளல்

25. இலையில் வேர் வளரக்கூடிய தாவரம் எது?
1) சதைகரைச்சான் 2) வெற்றிலை 3) கற்றாளை

(02) அ பகுதிக்குரிய விடைகளை ஆ பகுதியில் இருந்து தெரிவு செய்து பொருத்தமான ஆங்கில எழுத்தை கட்டத்தினுள் எழுதுக

| அ | | ஆ |
|---|---|---|
| 01. நிழல் தரும் மரம் | | A - தேக்கு மரம் |
| 02. பலகை பெறுதல் | | B - ஆமணக்கு |
| 03. ஊர்ந்து செல்லும் பிராணி | | C - யானை |
| 04. தலைவனை பின்பற்றுதல் | | D - பாம்பு |
| 05. பால், முட்டை | | E - காகம் |
| 06. ஆகாயத்தொட்டி | | F - பிளாஸ்ரிக் |
| 07. சேதனைப்பசளை | | G - நிறையுணவு |
| 08. தண்டு மூலம் கன்றைப்பெறல் | | H - மகாவம்சம் |
| 09. எமது நாட்டின் வரலாறு | | I - மாட்டெரு |
| 10. உக்கிப் போகாத பொருள் | | J - மரவள்ளி |

(03) பின்வரும் ஆங்கில சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக

11. Face .............................. 12. play Ground ..............................

13. Market .............................. 14. parrot ..............................

(04) பின்வருவனவற்றின் சிங்கள கருத்தினை தமிழில் எழுதுக

15. நங்கி .............................. 16. வாடிவென்ன ..............................

17. றோஹல .............................. 18. வதமல ..............................

(05) சரியான விடையினை புள்ளிக்கோட்டில் எழுதுக

19. நுளம்பின் மூலம் பரவக்கூடிய நோய்கள் இரண்டு தருக?
அ ..............................
ஆ ..............................



20. விலங்குணவுகள் இரண்டு தருக?
அ.............................. ஆ..............................

21. மரப்பொந்தில் வாழும் பறவை இரண்டு தருக?
அ .............................. ஆ..............................

22. கப்பல் நங்கூரமிட்டு நிறுத்தப்படும் இடம் எது? ..............................

23. தேசப்படத்தில் நதிகளைக்குறிக்க பயன்படுத்தப்படும் நிறம் யாது? ..............................

24. தென்மாகாணத்தில் உள்ள மாவட்டம் ஒன்று தருக ..............................

25. இலங்கைப் படத்தில் நிழற்றிக்காட்டப்பட்டுள்ள மாவட்டம் எது?
..............................



(06) சரியான விடையின் கீழ் கோடிடுக

01. மலைநாட்டில் அமைந்துள்ள நகரம் எது?
1) நுவரெலியா 2) கிளிநொச்சி 3) மாத்தறை

02. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட சிறிய நிலப்பரப்பு எவ்வாறு அழைக்கப்படும்?
1) குடா 2) சமுத்திரம் 3) தீவு

03. சிறுவர் தினம் கொண்டாடப்படும் திகதி யாது?
1) டிசம்பர் 01 2) ஒக்டோபர் 01 3) மே 1

04. கடல் நீரில் இருந்து பெறப்படுவது?
1) வினாகிரி 2) உப்பு 3) பெருங்காயம்

05. மகிழ்ச்சியான முகத்தைக் காட்டும் உரு எது?

1)  2)  3) 

06. குழுவாக விளையாடும் போது ஏற்படும் நற்பண்பு அல்லாதது எது?
1) விட்டுக்கொடுத்தல் 2) ஒற்றுமை 3) சண்டைபிடித்தல்

07. கோழி முட்டையை அடைகாக்க எடுக்கும் நாட்கள் எத்தனை?
1) 16 நாட்கள் 2) 21 நாட்கள் 3) 29 நாட்கள்

08. நாம் அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டிய இடம் எது?
1) நூலகம் 2) சந்தை 3) வங்கி

09. தகவல்களை மிகவேகமாக பரிமாற்றம் செய்ய உதவும் சாதனம் எது?
1) பத்திரிகை 2) தந்தி 3) மின்னஞ்சல்

10. முக்கனிகள் எவை?
1) மா, பலா, வாழை
2) வாழை, அன்னாசி, தோடை
3) அப்பிள், மா, வாழை

11. சமுத்திரத்தில் இருந்து பெறப்படுவது?
1) தங்கம் 2) இரும்பு 3) முத்து

12. மண்ணுடன் சேரும் போது உக்கலடையாத பொருள் எது?
1) இலை சருகுகள் 2) கண்ணாடித்துண்டு 3) பலகைத்துண்டு

13. பின்வருவனவற்றில் மணமற்ற பூ எது?
1) மல்லிகை 2) கடதாசிப்பூ 3) ரோசா

14. காற்றில் பறந்து செல்லும் வித்து எது?
1) வெண்டி 2) எண்ணை 3) வேம்பு

15. மழைபெய்வதால் ஏற்படும் தீமை எது?
1) சூழல் குளிர்ச்சியடைதல்
2) பயிர்களுக்கு நீர் கிடைத்தல்
3) வெள்ளப் பெருக்கு ஏற்படல்

# வன்முறைக்கு தூபமிட்டது யார்?

# மாணவர்களுக்கு இதில் தொடர்பில்லை

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையில் தெரிவிப்பு

மாணவி வித்தியாவின் கொலையை கண்டித்தும், குற்றவாளிகளுக்கு உச்ச தண்டனை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் முன்வைத்து வடமாகாணம் சார்ந்த அனைவரும் கடந்த 20ஆம் திகதி (புதன்கிழமை) முற்பகல்10.மணிக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக ஒன்றுகூடி எதிர்ப்பை அமைதியான முறையில் வெளிப்படுத்துவதோடு இந்நாட்டின் ஜனாதிபதியிடம் நீதி வேண்டி, குற்றவாளிகளுக்கு உச்ச தண்டனை வழங்கக்கோரி வடக்கு மாகாண முதலமைச்சரிடமும், வடமாகாண ஆளுநரிடமும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடமும் அனைவரும் சேர்ந்து மகஜர்களைக் கையளிப்பது என முடிவு செய்யப்பட்டது.

இதற்கான அறிவிப்பு இரண்டு நாட்களுக்கு முன்னரே துண்டுப்பிரசுரம் மூலம் அனைத்துச் சமூகத்திற்கும் வழங்கப்பட்டது. அதுமட்டுமன்றி ஊடகங்களுக்கூடாகவும் வெளிப்படுத்தப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட அனைவரும் தாம் கலந்து கொள்வதனை முன்கூட்டியே உறுதிப்படுத்தினர்.

இந்த அமைதிச் செயற்பாடுபற்றி முறையாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டது.

இந்த ஒன்றுகூடலை அவதானித்து சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க நான்கு பொலிஸ் உத்தயோகத்தர்கள் மட்டும் கடமையில் இருந்தனர். அவர்கள் மிகவும் அமைதியாக ஒன்றுகூடலை அவதானித்தனர்.

அன்றையநாள் மதகுருமாரும், அரசியல் தலைவர்களும், பேராசிரியர்களும், பல்கலைக்கழக ஆசிரியர்களும், மாணவர்களும், பெண்கள் அமைப்புச் சார்ந்தோரும், வர்த்தகப் பெருமக்களும், 'தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களும், பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும், யாழ். இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களும், பொதுமக்களும் .என ஆயிரக் கணக்கானவர்கள் உணர்வுடன் ஒன்று சேர்ந்தனர். அனைவரும் ஆளுநர் அலுவலகம் முன்பாக அமைதியாக ஒருமித்தனர்.

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களை மிகவும் கட்டுப்பாட்டுடன் அதிலும், ஆசிரியர்களும் வழிப்படுத்தியமை அனைவராலும் பாராட்டப்பட்ட விடயம்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் விநியோகிக்கப்பட்ட பதாகைகள் தவிர எவையும் அங்கு அனுமதிக்கப்படவில்லை. அனைவரும் அப்பதாகைகளைச் சுமந்த வண்ணம் ஒன்று சேர்ந்தனர். கோசங்கள் எவையும் அங்கு எழுப்பப்படவில்லை. எழுப்பவேண்டிய முக்கிய கோசமான குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்குங்கள் என்ற வாசகம் அனைவரது கைகளிலும் எழுத்து மூலம் இருந்ததால் கோசத்திற்கான அவசியம் ஏற்படவில்லை. எந்தவிதமான ஒலிபெருக்கிச் சாதனங்களும் பயன்படுத்தப்படவில்லை. ஊடகவியலாளர்களின் நேர்காணல்கள் மட்டும் நடைபெற்றன.

ஒன்றுகூடலின் பின்னர் மகஜர்களைக் கையளிப்பது என முடிவுசெய்யப்பட்டதன் பிரகாரம், முதலமைச்சரையும், ஆளுநரையும், அரசாங்க அதிபரையும் குறித்த இடத்திற்கு அழைத்து மகஜர்கள் கையளிக்க ஏற்பாடாகியிருந்தது.

இவ்வொன்றுகூடலில் பங்கேற்ற எவரும் வன்முறையில் ஈடுபடவில்லை. குறிப்பாக அதிபர்களோ, ஆசிரியர்களோ ஒன்றுகூடலில் கலந்து கொண்ட மாணவர்களோ, பொதுமக்களோ எவரும் வன்முறையைக் கையாளவில்லை.

எமது ஒழுங்கமைப்பு தவறானது என்றும், இது தேவையற்றது என்றும் விமர்சனம் செய்பவர்கள் ஒன்றைமட்டும் உணர்ந்துகொள்ள வேண்டும். அட்டூழியங்கள் எமது வீட்டுக்கதவைத் தட்டும் வரை நாம் பொறுமையாக இருந்தால் எமது சந்ததி அழிந்துவிடும். என்பதனை வெளிப்படுத்தி நிற்கின்றோம். என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் வி.ரி.சகாதேவராஜா, பொதுச் செயலாளர் சரா புவனேஸ்வரன் ஆகியோர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## ஸ்ரீ ஜெய நீராவியடி வீரகத்தியானின் 10ஆம் நாள் திருவிழா இன்று



தேரேறி வருகின்ற நீராவிப் பதி விநாயகனே!
ஊரார் ஒன்று கூடிடுவர் உன் வடம் பிடித்திடவே!
வேரோடு வினையறுக்கத் தேரேறி வாருமையா!
எம் இன்னல்கள் போக்கிடுவாய் - கஜமுகனே!
கணநாதனே கணேசனே கரங்குவித்தோம் கரிமுகனே!
தேர் மீது காட்சி தரும் விக்ன விநாயகனே!
மங்களமாய் நாம் வாழ வழிகள் பல தந்திடுவாய்!
மனமார வணங்குகின்றோம்! கணபதியே சரணம் ஐயா!


## தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பிகையின் ரதப்பவனி இன்று



தொல்லைகள் நீக்கிடவே
தோல்விகள் களைந்திடவே
தொல்புரத்தூர் தேவியவள்
ஆதிமுத்துமாரியம்மன்
ரதமேறி வருகின்றாள்...
அகிலாண்ட ஈஸ்வரியாம்
அவனிபுகழ் ஓங்கிடவே
தாயாக வந்தெம்தவிப்பை
போக்கிடவே
ஆதிமுத்துமாரியம்மன்
ரதமேறி வருகின்றாள்.
ரதமேறும் அன்னையின்
ரதவடத்தை கைபிடிக்க
கனிவுடனே ஆன்மாக்கள்
விரைந்து வாரீர் தலத்துக்கு
முத்துமாரி அருளாட்சி
அடியவர்கள் பெற்றிடுவோம்.

ர.நிரஞ்சன்
தொல்புரம்மத்தி,
சுழிபுரம்.

# பன்மொழிப்புலவர் கலாநிதி தாவீது அடிகளாரின் இலட்சியங்கள்



நம் நாட்டில் காலத்துக்குக்காலம் பல அறிஞர்கள் தோன்றி மறைந்துள்ளனர். அவர்கள் வரிசையில் 1907 ஆம் ஆண்டு யூன் மாதம் 28ஆம் திகதி பிறந்து 1981ஆம் ஆண்டு யூன் மாதம் முதலாம் திகதி மறைந்த தும்பளை அருட் தந்தை கலாநிதி தாவீது அடிகளாரும் ஒருவர் ஆவார்.

அவர் ஒரு மேன்மை மிக்க இலட்சியவாதி ஆவார். அவர் வாழ்ந்த கால இலங்கையில் ஏற்பட்ட பிரச்சினைகள் நன்றாய் அறிந்த ஒரு வரலாற்று அறிஞராக மட்டுமல்ல பன்மொழிகளின் ஆய்வாளனாகவும் விளங்கினார். அவர் காலத்தில் இனப்பூசல்கள் இடையிடையே ஏற்பட்டு பல சொல்லொணாத் தாக்கங்களை உருவாக்கி மக்களின் வாழ்க்கையைச் சின்னாபின்னப்படுத்தின. மொழி ரீதியாகவும், இன ரீதியாகவும் சிங்களவர், தமிழர் என்று இரு துருவங்களாக பாகுபாட்டுடன் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வந்தமையினால் அத்தகைய அபிப்பிராயங்களை சீர் செய்து இன, மொழி பேதங்களை களைவதையே நோக்காகக் கொண்டவர் தாவீது அடிகள்.

அந்த இலட்சியத்தைக் கொண்ட தாவீது' அடிகள் மக்கள் மத்தியிலே 'இனங்கள்' என்ற அடிப்படையில் சிந்திப்பதைச் சீர் செய்து இனங்களிடையே ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்த தனது மொழி ஆய்வுகளை மேற்கொண்டார். முக்கியமாக சொற்பிறப்பியல் ஆய்வுகளில் ஈடுபட்டு சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிடையே ஒற்றுமைப் பண்புகளையும் அம்மொழிகளின் தோற்றங்களையும் வெளிக்கொணர்ந்து உண்மை நிலைமைகளை எடுத்துக் கூறி இனப் பூசல்கள், பிணக்குகள் அற்ற ஐக்கிய இலங்கையை உருவாக்குவதையே இலட்சியமாகக் கொண்டு பணி ஆற்றினார். அவர் வாழ்ந்த காலத்தின் இறுதிக்கட்டத்தில் 'சிங்களவர் எங்கள் உறவினர்' என்ற கருத்தினை வலியுறுத்தி சொற்பிறப்பியல் ஒப்பீட்டு பேரகராதியை வெளியிட முயற்சிகளை மேற்கொண்டார்.

**தும்பளை கலாநிதி தாவீது அடிகள் மறைந்த 34 ஆவது ஆண்டு நிறைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இக் கட்டுரை எழுதப்பட்டதாகும்...**

தமிழ் - சிங்கள சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை 1973ஆம் ஆண்டு தமிழிலும், தமிழ், சிங்கள சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை 1974ஆம் ஆண்டு ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டார். சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் -சிங்கள் இலக்கண அகராதி (மூன்றாம் பாகம்) என்ற ஆய்வு வெளியீட்டின் ஆறாம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'இந்த மொழி ஆய்வு நம் நாட்டில் பெரும் பயனைத் தரப்போகின்றது. பயன், மொழிக்கு மட்டுமன்று சிங்கள தமிழ் இனத்திற்கே நல்ல பயன் அளிக்க இருக்கிறது. எனது ஆய்வு சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்குள்ளும் உள்ள நெருங்கிய தொடர்பை எடுத்துக்காட்டி இரு இன உறவுக்கு வித்திட்டு தேசிய ஒற்றுமையை கொண்டுவரவல்லது' என்றார்.

மனிதனை மனிதன் மதித்து வாழுவதற்கே மொழியைப் பயன்படுத்த வேண்டும். இதுவே தாவீது அடிகளின் முக்கிய இலட்சியமாகும்.

தேசத்தின் ஒற்றுமையை முன்னிலைப் படுத்தி மொழி ஆய்வுகளை மேற்கொண்ட தாவீது அடிகள் பற்றி 1982ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட 'சற்றர்டே றிவீயூ' (saturday review) என்ற ஆங்கிலப்பத்திரிகையில் அவரைப்பற்றி ஓர் கட்டுரையை அருட்பணி எம்.பாவிலுப் பிள்ளை (அமதி) எழுதிப் பிரசுரித்தார். அக்கட்டுரையின் தலைப்பு the late 'fr.david.... martyr to national unity" என்பதாகும். அதாவது 'மறைந்த தாவீது அடிகள் - தேசத்தின் ஐக்கியத்திற்குத் தியாகி' என்பதாகும். இது அவர் ஓர் தேசியவாதி என்பதை ஊர்ஜிதப்படுத்தியுள்ளது. பேரினவாதிகளின் ஆட்சி அதன் போக்கை மாற்றி சிறந்த நல்லாட்சி ஏற்பட்டு ஐக்கிய இலங்கை உருவாகுவதையே அவர் விரும்பினார்.

இலங்கையில் வாழும் எல்லா மக்களிடையேயும் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்பதையே தனது இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த மாமேதை தாவீது அடிகள் முன்னைய யாழ் பொது நூலகம் என்ற அறிவாலயம் 1981 மே மாத இறுதி நாளில் எரியூட்டப்பட்ட செய்தியைக் கேட்டு மீளாத்துயில் கொண்டார்.

ஆக்கம்
**சீமாப்பிள்ளை அந்தோனிமுத்து**
தாவீது அடிகள் நினைவுக்குழு இணைப்பாளர்
தும்பளை பருத்தித்துறை.

# ஐ.எஸ்.ஐ ஒடுக்க புதிய முயற்சி

# அதிரடி திட்டம் வெளியீடு

இணையத்தளங்கள் மூலம் பிரான்ஸ் இளைஞர்களை தீவிரவாதத்திற்குத் தூண்டும் ஐ.எஸ் தீவிரவாதிகளை கண்காணிக்க புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளதாக பிரான்ஸ் பிரதமரான மேனுவல் வால்ஸ் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் உள்ள (Dauphine) பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பிரதமர், இணையத்தளங்கள் மூலம் பிரான்ஸ் இளைஞர்களை மூளை சலவை செய்யும் ஜிகாதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது வருத்தம் அளிக்கிறது.

தற்போதைய அதிநவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி ஐ.எஸ் தீவிரவாதிகள் இளைஞர்களை எளிதில் தொடர்பு கொண்டு அவர்களை தங்களின் வலைக்குள் விழ வைக்கிறார்கள்.

ஐ.எஸ் தீவிரவாதிகளின் இந்த முயற்சியை முறியடிக்கும் விதத்தில், இணையத்தளங்கள் மூலமாக அவர்களை தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.

இதற்கு, அனுபவம் வாய்ந்த, அதிநவீன தொழில்நுட்பங்கள் தெரிந்த 'ஹேக்கர்களை' (Hackers) பணியில் அமர்த்தி தீவிரவாதிகளை கண்காணிக்க உள்ளதாக பிரதமர் மேனுவல் வால்ஸ தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் இளைஞர்களை தீவிரவாதிகள் மூளை சலவை செய்வதற்குள் 'ஹேக்கர்கள்' எளிதில் கணனி மற்றும் இணையத்தளங்களுக்குள் ஊடுருவி ஜிகாதிகளை அடையாளம் கண்டு அவர்களின் முயற்சிகளை முறியடிப்பார்கள்.

பாரிஸ் பத்திரிகை தாக்குதலுக்கு உள்ளானதற்கு பிறகு, தீவிரவாதத்தை தடுக்கும் வகையில், சுமார் 60 மில்லியன் யூரோக்கள் மதிப்பிலான திட்டங்களை செயற்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாமர மக்கள் பயன்படுத்தும் இணையத்தளங்களை தீவிரவாதிகளும் எளிதில் பயன்படுத்தி சர்வதேச அளவில் தங்களுடைய இயக்கங்களுக்கு ஆள் சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தீவிரவாதிகளின் இந்த முயற்சியை முறியடிக்கவே தற்போது புதிதாக ஹேக்கர்களை பணியில் அமர்த்த உள்ளதாக மேனுவல் வால்ஸ் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் தொடக்கத்தில் வெளியான புள்ளி விபரத்தின் படி, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சுமார் 1,683 பேர் சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்துள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியானது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# காந்தியின் படம் இல்லாத இந்திய நாணயத் தாள்கள்

## புதிய சர்ச்சை

இந்திய ரிசர்வ் வங்கி புதிதாக அச்சிட்டுள்ள பத்து ரூபாய்த் தாளில் காந்தி படம் இல்லை என்று தகவல் வெளியானதால் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.


இந்திய நாணயங்களில் மகாத்மா காந்தியின் படம் 1996 ஆம் ஆண்டு முதல் இடம் பெற்று வருகிறது.

இந்நிலையில் தற்போது புதிதாக வெளியாகியுள்ள 10 ரூபாய்த் தாளில் காந்தி படம் இருக்கும் இடத்தில் அசோக ஸ்தூபியில் உள்ள சிங்கமுகம் காணப்படுகிறது.

இந்தத் தாள்களை பெற்றவர்கள் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாகி வங்கியில் கேட்ட போது சரியான பதில் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகளும் தங்களுக்கு இது பற்றி தெரியாது என கூறியதால் இந்த விவகாரம் பெரும் சர்ச்சையாக எழுந்துள்ளது.

# இந்தியாவில் சுட்டெரிக்கும் வெயிலால் பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு



இந்தியாவின் ஆந்திராவிலும், தெலுங்கானாவிலும், வெயிலுக்கு பலியானோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த இரு மாநிலங்களில் மட்டும், நேற்றுமுன்தினம் வரை, 2,000 பேர் வெயிலால் இறந்துள்ளனர்.

கோடை காலம் தொடங்கியதில் இருந்து, இந்தியா முழுவதும் கடும் வெயில் வாட்டி வதைக்கிறது. அதிலும், அண்டை மாநிலங்களான ஆந்திரா, தெலுங்கானாவிலும், வட மாநிலமான உத்தரப்பிரதேசத்திலும் மற்றும் ஒடிசாவிலும், சூரியன் சுட்டெரிக்கிறது.

ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டத்தில், ஒரே நாளில், வெயிலுக்கு, ஏழு பேர் மயங்கி விழுந்து இறந்தனர். இந்த இரு மாநிலங்களில், 46 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகி, மக்களை வாட்டி வதைக்கிறது.

ஒடிசாவில், 45.5 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது. அங்கு, அனல் காற்று வீசுகிறது. ஒடிசாவில் மட்டும், 108 பேர், வெயிலை தாங்க முடியாமல் இறந்துள்ளனர்.

உத்தர பிரதேசம், அரியானா, ராஜஸ்தான், தமிழகம், ஜார்க்கண்ட் மாநிலங்களிலும் கடும் வெயில் அடிக்கிறது. அதிலும், கடந்த வாரத்தில், கடுமையான வெயில் வாட்டி வதைத்தது. 'தென்மேற்கு பருவமழை தொடங்கவுள்ளதை அடுத்து, வெப்பத்தின் தாக்கம் படிப்படியாக குறையும்' என அறிவித்து, வெயிலால் பொசுங்கிப் போயுள்ள மக்களின் வயிறுகளில் பால் வார்த்துள்ளது, வானிலை ஆராய்ச்சி மையம்.

இந்திய வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் பி.பி.யாதவ் கூறியதாவது,

வழக்கமாக, யூன் 1 ஆம் திகதி தென்மேற்கு பருவமழை தொடங்கும். சில ஆண்டுகள், இந்த குறிப்பிட்ட நாளுக்கு, ஒரு சில நாட்கள் முன்பாகவோ, பின்பாகவோ மழை பெய்யும். இந்தாண்டுக்கான பருவமழை வங்கக் கடலில் ஏற்கனவே பெய்யத் தொடங்கியுள்ளது.

அரபிக் கடலின் சில பகுதிகளிலும் பெய்து வருகிறது. நம் நாட்டை பொறுத்தவரை கேரளாவில் தான், பருவமழை முதலில் பெய்யும். காற்றின் வேகம், அடர்த்தி, மேகங்களின் போக்கு ஆகியவை தான் பருவமழை தொடங்குவதற்கு சாதகமான அறிகுறிகள்.

ஆனால், கேரளாவில் இந்த அறிகுறிகள் இன்னும் தென்படவில்லை. இன்னும் ஒரு சில நாட்களில் இந்த அறிகுறி தொடங்கும் என எதிர்பார்க்கிறோம். அப்படி தொடங்கினால் இன்னும மூன்று அல்லது நான்கு நாட்களில் கேரளாவில் தென் மேற்கு பருவமழை பெய்யத் தொடங்கும்.

இந்தாண்டு பருவமழை வழக்கத்தை விட சற்று குறைவாகவே இருக்கும் என அறிவித்துள்ளோம். இந்த அறிவிப்பில் எந்த மாற்றமும் இல்லை இவ்வாறு அவர் கூறினார்.

# பாரிஸியன் பாலத்தில் உள்ள காதல் பூட்டுக்களை அகற்ற முடிவு



பாரிஸியன் ஆற்றுப் பாலத்தில் தொங்கவிடப்பட்டுள்ள காதல் பூட்டுக்களை அகற்ற பிரான்ஸ் அரசு முடிவு செய்துள்ளது.

பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் உள்ள பாரிஸியன் ஆற்றுப் பாலத்தில் உள்ள இரும்புக் கம்பியினாலான தடுப்பு சுவரில் கடந்த பல ஆண்டுகளாக காதல் ஜோடிகள் "நேர்த்திக் கடன் பூட்டு" மாட்டி காதல் ய்ாகம் செய்து வருகின்றனர்.

உலக நாடுகளில் இருந்து சுற்றுலா வரும் காதலர்களும் தங்களது பங்குக்கு ஒரு நேர்த்திக்கடன் பூட்டை மாட்டிவிட்டுப் போவதால் இலட்சக்கணக்கான பூட்டுகள் இங்கு தொங்குகின்றன.

இந்த பூட்டுகளின் பாரம் தாங்காமல் சமீபத்தில் பாரிஸியன் பாலத்தின் ஒருபகுதி இடிந்து விழுந்ததாக செய்திகள் வெளியாகின. இந்நிலையில், பாரிஸ் நகரின் பாரம்பரிய எழிலை சீர்குலைத்து, மூடநம்பிக்கையை வளர்க்கும் நேர்த்திக்கடன் பூட்டுகளை இனி யாரும் மாட்டக் கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே மாட்டப்பட்டுள்ள பூட்டுகள் அனைத்தையும் அகற்றவும் அரசு நிர்வாகம் முடிவு செய்துள்ளது. தடுப்பு சுவற்றில் இரும்பு கம்பிக்கு பதிலாக கண்ணாடிகளால ஆன பேனல்களை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# தற்கொலைப்படைத்தாக்குதலில் நைஜீரியாவில் 26 பேர் பலி



நைஜீரிய நாட்டின் வடகிழக்கு பகுதியில் உள்ள போர்னோ மாநிலதத்தின் தலைநகரான மைதுகிரியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் பகுதியில் உள்ள மசூதியில் நடந்த தற்கொலைப படைத் தாக்குதல் காரணமாக, அங்கு பிரார்த்தனைக்காக வந்திருந்த 26 பேர் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸார் கூறுகையில் "மைதுகிரியின் பரபரப்பான சந்தைப்பகுதியில் உள்ள அல்ஹாஜி ஹருனா மசூதிக்குள், உடலில் கட்டியிருந்த சக்தி வாய்ந்த வெடி குண்டுகளுடன் நுழைந்த தீவிரவாதி ஒருவர் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தியுள்ளான். இந்த தாக்குதலின் போது, அங்கு பிரார்த்தனைக்காக வந்திருந்த 26 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 28 பேர் படுகாயமடைந்துள்ளனர்." என்று தெரிவித்துள்ளனர்.

# நைஜீரியாவின் புதிய அதிபராக முகமது புகாரி பதவியேற்பு

நைஜீரிய அதிபராக முன்னாள் இராணுவ ஆட்சியாளர் முகமது புகாரி, நேற்றுமுன்தினம் பதவியேற்றுக் கொண்டார்.

நைஜீரிய அதிபர் தேர்தல் கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது. அதில், எதிர்க்கட்சித் தலைவரான முகமது புகாரி வெற்றிபெற்றார். தற்போது 72 வயதாகும் முகமது புகாரி கடந்த 1980 இல் சிறிது காலம் இராணுவ ஆட்சியாளராக நைஜீரியாவை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

இந்நிலையில் தற்போது ஜனநாயக முறையிலான தேர்தலில் வெற்றி பெற்று அதிபராகியுள்ளார்.

தற்போது நைஜீரியாவின் பொருளாதார, அரசியல் சூழல்கள் மிக மோசமாக உள்ளன. பெரும் ஊழல்கள் காரணமாக அரசு கருவூலம் காலியாக உள்ளது. தீவிரவாதம் காரணமாக 15 இலட்சம் மக்கள் வீடிழந்துள்ளனர்.

ஆபிரிக்காவின் மிகப்பெரும் எண்ணெய் வளம் மிக்க நாடான நைஜீரியாவை அதன் சிக்கல்களிலிருந்து மீட்டெடுப்பேன் என புகாரி தெரிவித்துள்ளார்.

அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குவதற்குக் கூட வெளியில் கடன் வாங்கும் சூழல் உள்ளது. அதிபராகப் பொறுப்பேற்கும் விழாவில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி உட்பட பலர் பங்கேற்றனர்.

தற்போதைய அதிபர் குட்லக் ஜோனதன், தனது ஆட்சி நிர்வாகம் பற்றிய அறிக்கையை புகாரியிடம் அளித்தார்.

# போரினால் சேதமான வீடுகளைத் திருத்த ஒரு இலட்சம் பெறுமதியான உதவித்திட்டம்

## வடமாகாண உறுப்பினர் அஸ்மின் தகவல்



வீடமைப்பு அமைச்சின் நிதியின் கீழ் வீடுகளைத் திருத்தியமைப்பதற்காக குடும்பமொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபா மதிப்புள்ள உதவித்திட் டம் தற்போது பிரதேச செயலக மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் குறித்த திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பயன்பெறுமாறும் பொது மக்களைக் கேட்டுக்கொள்வதாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ. அஸ்மின தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யாழ் மாவட்டத்தில் யுத்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகளைச் சீரமைப்பதற்கு விஷேட கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் குடும்பப் பதிவுகளைக் கொண்டிருக்கின்ற அனைவரும் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும். எனினும் போதியளவு விண்ணப்பங்கள் தம்மை வந்துசேரவில்லை என யாழ்ப்பாணம் பிரதேச செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. வீடுகளைப் புனரமைப்பதற்கு கிடைத்திருக்கின்ற இவ்வரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாது பயன்படுத்துவது சிறப்பானது. எனவே தங்களது வீடுகள் அமைந்திருக்கின்ற கிராம அலுவலர் பிரிவு ஊடாக விண்ணப்பங்களை வழங்கி குறித்த திட்டத்தின் கீழ் பயன்பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களையும் விபரங்களையும் தம்மிடமோ அல்லது குறித்த கிராம அலுவலரிடமோ பெற்றுக்கொள்ள முடியும் என பொது மக்களுக்கு அறியத்தருவதாகவும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ. அஸ்மின் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எம்.பி.க்களின் தொகையை அதிகரிப்பதற்கு எதிர்ப்பு

புதிதாக கொண்டுவரப்படவுள்ள 20 ஆவது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டமூலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 இலிருந்து 255 ஆக அதிகரிக்கப்படுவதற்கு அரசியல் கட்சிகள் பல தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய தொழிலாளர் சங்கம் ஆகிய கட்சிகள் இவ்வாறு எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இதனால், கடந்த வெள்ளிக்கிழமையும் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு கட்சிகளின் உடன்பாடு கிடைக்கப் பெறவில்லையெனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# யானைக்கு மாறவுள்ள வெற்றிலை அமைச்சர்கள்?

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பதவிவகித்த ஏழுபேர், எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் யானை சின்னத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களை கோரியுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தக் குழுவில் இருக்கும் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு வேட்பு மனுவை கொடுக்காமல் விடுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தீர்மானம் எடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

வேட்பு மனுக்களை கோரியுள்ளோரில் மாத்தறை, கண்டி, திகாமடுல்ல, மாத்தளை, கேகாலை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே அடங்குகின்றனர் என்றும் அந்த தகவல்கள் தெரிவிக்கீன்றன.

# வடக்கின் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிப்பு

வடக்கு மாகாணத்தின் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இன்றிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் வாழ்க்கைச் செலவுப் படி 1950 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இது தொடர்பாகக் குறிப்பிடுகையில்,

கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் 2012 ஆம் ஆண்டுச் சுற்று நிருபத்தின் பிரகாரம் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இப்போது வரைக்கும் வாழ்க்கைச் செலவுப்படியாக மாதந்தோறும் 5850 ரூபா வழங்கப்பட்டு வருகிறது, அரச ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் கூட்டுறவுப் பணியாளர்கள் தங்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி நீண்ட காலமாக அதிகரிக்கப்படாமல் இருப்பதாகத் தொடர்ந்துமுறையிட்டு வருகிறார்கள்.

பணியாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, கூட்டுறவுத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் எனது அங்கீகாரத்துடன் வாழ்க்கைச் செலவுப்படியை அதிகரிப்பதென்று தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம், கிராமிய வங்கிகளில் இருந்து பெறப்படும் இலாபத்தினைத் தவிர்த்து சுய முயற்சியால் இலாபம் ஈட்டுகின்ற சங்கங்கள் யாவும் பணியாளர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படியாக 7800 ரூபாவை இன்று முதல் வழங்கவேண்டும் எனத் தெரிவித்ததோடு, இந்த அதிகரிப்பானது ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களுக்குப் பொருந்தாது எனவும் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு அண்மையில் 30 வீதம் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, கூட்டுறவுத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு வடக்கு கூட்டுறவு அமைச்சால் மே 15ஆம் திகதி முதல் 100 நாள் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (160)

### அரச...

மூன்றாம் தரத்திற்கான உத்தியோகத்தர்கள் தெரிவிற்காக, கடந்த வருட்ம் இடம்பெற்ற போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் புதிய சேவையாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்கள், பயிற்சியின் பின்னர் வெற்றிடங்கள் காணப்படும் பிரதேசங்களுக்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

மேலும் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு யூலை மாதமளவில் நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பொதுத்...

டன. எனினும் தமிழ் மக்கள் எதிர்பார்த்தவிடயங்கள் எதுவும் இதுவரை நடைபெறவில்லை குறிப்பாக மீள்குடியேற்றம் பூர்த்தியாகவில்லை எனவே இந்த விடயங்கள் குறித்து எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்க வேண்டிய தேவை உள்ளது.

அத்துடன் எந்தெந்த மாவட்டங்களில் யார்? போட்டியிடு வது என்பது தொடர்பான வேட்பாளர் பட்டியலைத் தயாரிப்பதற்கான கலந்துரையாடல்கள் இடம் பெற்றுவருகின்றன.

எமது கூட்டமைப்பிலுள்ள கட்சிகளிடையே பல்வேறு பட்ட கருத்துக்கள் உள்ளன. அதனை நான் மறுக்கவில்லை எனினும் நாம் பொது நோக்கிற்காக ஒன்றிணைந்துள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மணல்...

பட்டுள்ள தடை உத்தரவு உடன் அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் யாழில் மணல் அகழ்விற்கு விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவை நீக்குமாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் நிஹால் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய யாழ். குடாநாட்டில் சிறிய அளவில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்படும் இடங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதாகவும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் நிஹால் ரூபசிங்க மேலும் தெரிவித்தார்.

### இம்மாத...

அதிகரிப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தவிர்ந்த ஏனைய கட்சிகள் எதிர்த்து வருகின்றன.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகை அதிகரிப்பை ஐ.தே.க எதிர்க்கும். புதிய அரசின் 100 நாள் செயற்றிட்டம் நிறைவடைய நாடாளுமன்றம் கலைக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டது. ஆனால் அந்த நாட்கள் நிறைவடைந்து பல நாட்களாகிவிட்டன. மக்கள் விரைவில் தேர்தல் நடாத்துவதனையே விரும்புகின்றனர். எனவே 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டோ, அல்லது அது இல்லாமலோ தேர்தல் நடாத்தப்படவேண்டும். இந்தியா 1.4 பில்லியன் மக்கள் தொகையைக்கொண்டநாடு ஆனால் அங்கு 545 எம்.பிக்களே உள்ளனர். ஆனால் எமது நாட்டில் 20 மில்லியன் மக்களே உள்ளனர். அதற்காக 255ஆகஎம்.பி.க்கள் தொகையை உயர்த்த முடியுமா? எனவே நாடாளுமன்றம் கலைக்கப்படுவதனை சுதந்திரக்கட்சி தடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் புதிய நாடாளுமன்றம் அமையுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்த நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா கூட்டத்தொடருக்கு முன்னதாக புதிய அரசாங்கத்தை அமைக்கும் வகையில் இம்மாத நடுப்பகுதியில் நாடாளுமன்றத்தை கலைத்து எதிர்வரும் ஆகஸ்ட் 27ஆம் திகதி தேர்தலை நடாத்த திட்டமிடப்பட்டுள்ள்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மேலதிக..

வெற்றிடத்துக்கே செந்தில் நந்தனன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் தனது கடமைகளை இன்று முதல் பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### காணாமற்...

மணியம் என்ற மாணவியே கடந்த 28 ஆம் திகதி தொடக்கம் காணாமற் போயுள்ளதாக மாணவியின் பெற்றோரால் நேற்று முன்தினம் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்றுக் காலை வவுனியா பஸ் தரிப்பு நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் தனிமையில் நின்று கொண்டிருந்த நிலையில் வவுனியா பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டு வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது, பெற்றோரினால் குறித்த மாணவி அழைத்துச் செல்லப்படும்வரை சிறுவர் இல்லத்தின் பாதுகாப்பில் ஒப்படைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்

### தமிழக...

பணியில் ஈடுபடுத்துவதற்காக சில பெரிய ரோந்துக் கப்பல்களையும், 10 அதிநவீன விரைவு படகுகளையும் சர்வதேச எல்லைப் பகுதிக்கு கொண்டு வந்து இலங்கைக் கடற்படை நிறுத்தி உள்ளது என தமிழக ஊடகமான மாலைமலர் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச எல்லையைக் கடந்து இலங்கை எல்லைக்குள் மீன் பிடிக்க நுழையும் தமிழக மீனவர்களை முற்றிலுமாக தடுக்கும் நோக்குடன் இலங்கைக் கடற்படை இந்த நடவடிக்கையை எடுத்து இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

### சந்தேக...

தனர். இதில் 43 சந்தேகநபர்களுக்கு 6ஆம் மாதம் 1ஆம் திகதி வரையில் விளக்க மறியல் உத்தரவு வழங்கப்பட்டிருந்தது

இந்நிலையில் குறித்த 43 சந்தேகநபர்களே நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற வன்முறைக்கு காரணம் என பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்நிலையில் இந்த 43 சந்தேகநபர்களும் இன்றைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இதனையொட்டி ஊர்காவற்றுறை, யாழ்.நீதிமன்றம் ஆகியவற்றுக்கு விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஊர்காவற்றுறை நீதிமன்றில் 9 சந்தேகநபர்களும் ஆஜர்படுத்தப்பட்டு இன்றைய தினமே குறித்த வழக்கு யாழ். மேல்நீதிமன்றுக்கு மாற்றப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### கூட்டமைப்புடனான...

வேண்டும். ஒரே தேசியக் கொடியின் கீழ் இலங்கை ஒன்றுபட்டிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கத்துடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்றாகப் பணியாற்றுகிறது.

இந்த ஆண்டு சுதந்திரதின நிகழ்வில், கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இதன் மூலம் இலங்கையின் சுதந்திர தினத்தையும், இராணுவத்தையும் கூட கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டது வெளிப்படுகிறது.

சில வேளைகளில் சில கூட்டமைப்பு உறுப்பினர்களால், எதிர்மறையான கருத்துகள் வெளியிடப்பட்டிருக்கலாம். ஆனால் நாடாளுமன்றத்தில் அரசாங்கமும் கூட்டமைப்பும் மிகவும் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றன.

வடக்கில், போர் முடிவுக்கு வந்த பின்னர், இராணுவத்துக்குத் தேவைப்படாத நிலங்கள், அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வீதி அபிவிருத்தி நிதி மோசடி

# பிரதமர் ரணில் குற்றச்சாட்டு முற்றாக மறுக்கிறார் மகிந்த

ஜனாதிபதியாகவும், பெருந்தெருக்கள் அமைச்சராகவும் கடமையாற்றிய போது 28 பில்லியன் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டதாக பிரதமர் ரணில் சுமத்திய குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையுமில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு எதிராக போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தமது ஆட்சிக் காலத்தில் 28 வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்காக 55 பில்லியன் ரூபா கடன் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

முன்னெடுக்கப்பட்ட அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் கிரமமான அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.



தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் எவ்வாறு செலவிடப்பட்டது என்பது குறித்து கோப் ஆணைக்குழுவினால் விசாரணை நடத்தி உண்மையை அறிந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

தமது வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை புதிய அரசாங்கம் பிழையாக செலவிட்டுள்ளதாகவும் இதனை மூடி மறைப்பதற்காக இவ்வாறு குற்றச்சாட்டுக்களை முன் வைத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாரியளவில் நிதி மோசடியில் ஈடுபட்டதாக பிரதமர் அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் தோல்வியின் பின்னர் மகிந்தவின் செயற்பாடு என்ன?

### கூறுகிறார் சந்திரிகா

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைத் தழுவியதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வீட்டில் இருந்திருக்க வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்

கடந்த காலங்களில் அவர் செய்த காரியங்கள் தொடர்பில் அவரே நன்கு அறிவார், அதிகாரமின்றி அவரினால் இருக்க முடியாது என சுட்டிக்காட்டியுள்ளார.

எந்தவொரு தேர்தலிலும் தோல்வியடையாது தாம் ஒன்பது ஆண்டுகள் வீட்டிலிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

1980களிலும், 2001 ஆம் ஆண்டிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவடையச் சிலர் உதவிகளை செய்திருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான விடயங்களினால் நாம் பின்வாங்கி விடக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த பத்தாண்டு காலப் பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளினால், மக்கள் சுதந்திரக் கட்சி வேட்பாளரை நிராகரித்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

# கட்சியை காட்டிக்கொடுக்கேன் ஐ.தே.க.விடமும் செல்லமாட்டேன்

### உறுதியாகக் கூறுகிறார் சுசில்

(கொழும்பு)

நான் அன்றிலிருந்து பாதுகாத்து வந்த கட்சியை காட்டிக் கொடுத்து ஐக்கிய தேசியக் கட்சியிடம் சென்று பதவி பெற்றுக் கொள்ளமாட்டேன். விரும்பியவர்கள் அவ்வாறு சென்று பதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

வரகாபொல பிரதேசத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

தேசிய அரசாங்கத்தை எதிர்ப்பதுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் இணைத்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கமொன்று அமைப்பதே எமது நோக்கம்

ஐக்கிய தேசியக் கட்சி தங்களின் தேர்தல் பிரசாரத்துக்கான ஜனாதிபதி மைத்திரிபால



சிறிசேனவை பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது


ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலான தொகுதி காரியாலயங்களில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புகைப்படங்களே வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு எந்தப் படத்தை வைப்பது என்று தெரியவில்லை

எவ்வாறாயினும் சமயம் வரும் போது இதுகுறித்து அறிவிக்கப்படும் எனவும் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# புலிகளின் ஆதரவாளருக்கு பிரதி அமைச்சர் பதவி

### பிரதி சபாநாயகர் விசனம்



பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் கருத்துகள் தொடர்ந்தும் புலிகளின் விருப்பு வெறுப்புகளுக்காக குரல் கொடுப்பது போன்று உள்ளதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விஜயகலாவிற்கு மாத்திரமின்றி ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையும் அது போன்று காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இருந்த போது வடக்கில் இளைஞர்களுக்கு முழுமையான சுதந்திரம் காணப்பட்டதாக விஜயகலா தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

ஊழல் மோசடிகள் இடம்பெறவில்லை எனவும், இந்த நாட்டு பாதுகாப்பு பிரிவை விட, விடுதலைப் புலிகளின் ஆட்சியின் போது மிகவும் சுதந்திரமான சூழல் காணப்பட்டதனை அவர் சுட்டிக்காட்ட முயற்சித்ததாக பிரதி சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், விடுதலைப் புலிகளுக்கு சார்பான அரசியல்வாதி ஒருவருக்கு நாட்டில் பிரதி அமைச்சர் பதவி வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சி, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என பிரதி சபாநாயகர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பந்துலவின் சவாலை ஏற்றார் ஹர்சா டி சில்வா

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை தொடர்பாக கலந்துரையாட தொலைக்காட்சி விவாதத்திற்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன விடுத்த சவாலை, பிரதி அமைச்சர் ஹர்சா டி சில்வா ஏற்றுக்கொண்டுள்ளார்.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவும், மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனும் நிதி தொடர்பில் போலியான தகவல்களை வழங்கி வருவதாக கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பந்துல குணவர்தன குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க அல்லது கொள்கை திட்டமிடல் துறை பிரதியமைச்சர் ஹர்சா டி சில்வா ஆகியோரை விவாதத்திற்கு வருமாறு பந்துல சவால்



விடுத்திருந்தார்.

இந்த சவால் குறித்து பரதியமைச்சர் ஹர்சா டி சில்வா, சிங்கள் ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடுகையில்,

அவருக்கும் எனக்கும் ஒரே நாளில் விடுமுறை கிடைக்கும் போது முழு நாட்டிற்கும் தெரியும் வகையில், நாட்டு பொருளாதாரம் குறித்து விவாதத்திற்கு செல்வோம் என பந்துல குணவர்தனவிற்கு நேற்றே கூறிவிட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 20 வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை பின் தள்ளிவிட்டு 100 நாட்களில் அதனை நிவர்த்தி செய்ய முடியவில்லை என குறிப்பிடுகின்றார்கள். வெறுமனே சவால் விடுத்துக்கொண்டிருக்காமல் பகிரங்கமாக விவாதத்திற்கு வரவும் இதில் எங்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை.

நானும் இது குறித்து விவாதிப்பதற்கான சந்தர்ப்பத்தை தான் எதிர்பார்த்துக்கொண்டுள்ளேன் என ஹர்சா டி சில்வா மேலும் குறிப்பிட்டுள்ளார்.


# பொலிஸ் அதிகாரிகள் அறுவருக்கு இடமாற்றம்

சேவையின் தேவை கருதி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் அறுவருக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோனின் பணிப்புரைக்கமையவே இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாளிகாவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.ஏ.ஐ. ஆர்.என். பெரேரா- புள்ளிவிபர பிரிவுக்கும் ஹபராதுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ.என். ஏக்கநாயக்க- மாளிகாவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பதுரலிய பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி கே.கே.பி. உதயகுமார- ஹபராதுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் புள்ளிவிபர பிரிவில் கடமையாற்றிய டபிள்யூ. எம்.டி.கே.பி. விஜேமன்ன வெள்ளவத்தை பதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும் பகமுன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.கே.எம்.பி. இலங்கசேகர- முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும் பொலன்நறுவை புலனாய்வு பிரிவு என்.ஏ.குணவர்த்தன- பகமுன பதில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

# டுபாய் விடுதியில் உதயங்க வீரதுங்க



(கொழும்பு)

தேடப்பட்டு வரும், ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க டுபாயில் தங்கியிருப்பதாக, நிதிக்குற்ற விசாரணைப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

உக்ரேனிய பிரிவினைவாதப் போராளிகளுக்கு ஆயுதங்களை விற்றதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள உதயங்க வீரதுங்க, ரஷ்யாவுக்கான தூதுவர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் இலங்கைக்கு திரும்பாமல் ஒளிந்து வாழ்கிறார்.

மகிந்த ராஜபக்ஷவின் பெறாமகனான இவர், மிக் போர் விமானக் கொள்வனவிலும் மோசடி செய்துள்ளதாக குற்றச்சாட்டுகள எழுந்துள்ளன.

இந்தநிலையில், அவர் ஈரானில் தங்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகின.

ஆனால் இந்த வாரம் அவர் டுபாயில் உள்ள மரியட் விடுதியில் தங்கியுள்ளதாக நிதிக் குற்ற விசாரணைப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அங்கிருந்து அவர் கொழும்பிலுள்ள பலருக்குத் தொலைபேசி அழைப்புகளை எடுத்துள்ளார என்பதும் தெரிய வந்துள்ளது.

உதயங்க வீரதுங்கவின் இராஜதந்திர கடவுச்சீட்டு செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ள நிலையில், அவர் எவ்வாறு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்கிறார் என்று புலனாய்வுப் பிரிவினர் விசாரணை மேற்கொள்கின்றனர்.

அவர் தனது சாதாரண கடவுச்சீட்டை இதற்கெனப் பயன்படுத்தியிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

உக்ரேனில் அவருக்கு சொத்துக்கள் மற்றும் உணவகம் என்பன உள்ள போதிலும், அங்கு அவரால் செல்ல முடியாது.

அவரைக் கைது செய்வதற்கு அங்கு சட்டவாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது என்றும் கொழும்பு ஆங்கில வார இதழ் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூன் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.